ஜென்மத்தில் சனி நிற்பதால் வியாதி வரும், இரண்டில்-உயிருக்கு பயம. நான்கில் - வேறு நகரம் குடிபோகுதல், ஐந்தில்-புத்திரசோகம், ஏழில் - மனைவிக்குத் தோஷம், எட்டில்-வியாதி, பத்தில்-ஜீவன பங்கம், பன்னிரண்டில்-தரித்திரம்.

கூடாத நட்சத்திரங்கள் (விருத்தம்)

"ஆதிரை பரணி கார்த்திகை யாமிலிய முப்பூரம் கேட்டை, தீதுரு விசாகஞ்சோதி, சித்திரை மகம் மீராறும், மாதனங்கொண்டார் தாரார் வழி நடைப்பட்டார் மீளார், பாய்தனிற் படுத்தார் தேறார் பாம்பின் வாய்த் தேரை தானே"

பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சித்திரை, சுவாதி, மகம் இந்த பனிரெண்டு நட்சத்திரங்களில் பணம் கொடுத்தால் வராமலும் பிரயாணம் செய்தவர் வராமலும் வியாதியுடன் படுக்கையில் படுத்தவர்கள் தேரமாட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

தாரா பலன்

ஜென்ம நக்ஷத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணிக்கொண்டு வந்த தொகையை ஒன்பதில் கழித்து நின்ற மிச்சத்தில் 2-4-6-8-9 உத்தமம். 1-வது ஜென்மதாரை கூடாது வாழைக்காய் தானம், 2-வது சம்பத்துதாரை கூடும் நன்மை, 3-வது விபத்து தாரை கூடாது. பழம் தானம். 4-வது சேக்ஷமதாரை கூடும் நன்மை, 5-வது பிரதியுக்தாரை கூடாது உப்புதானம். 6-வது சாதனதாரை கூடும் நன்மை, 7-வது நைதனதாரை கூடாது எள்ளு தானம், 8-வது மைத்ர தாரை கூடும் நன்மை 9-வது பரம மைத்திரம் கூடும் நன்மை. இம்மாதிரி பார்க்க வேண்டும்.

சந்திர பலன்

ஜென்ம ராசி முதல் அன்றைய தினம் சந்திரன் நின்ற ராசி வரைக்கும் எண்ணிவந்த தொகைக்கு பலன்.

1. சுகம் நன்மை, 2. நஷ்டம் சமம், 3. லாபம் நன்மை, 4. வியாதி தோஷம், 5. பங்கம் துயும், 6. சத்துருஜெயம் நன்மை, 7. கடன் சமம், 8. விரோதம் சமம், 9. தாமதம் சமம், 10. சம்பத்து நன்மை, 11. ஐஸ்வரியம், 12. நஷ்டம் இம்மாதிரி பார்க்க வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நவக்கிரக காரகங்கள்

சூரியன்

பிதுர் (பிதா), ஆத்மா, சிரசு, தந்தம், வலது நேத்திரம், சிலும்பின் மயிர், பைத்திய சரீரம், வைத்தியம், ஒரு தலை நோவு முதலிய சிரரோகம், சுரம், வியாதிஸ்திரீ அல்லது சித்தசுவாதீன மில்லாத ஸ்திரீபோகம், சௌகரியம், பிரதாபம், தைரியம், இராஜசேவை, உத்தியோகம், சைவனுஷ்டானம், தப்சு, சதாசிவன், பஞ்சலோகம், வச்சிர ரத்தினம், ரசவாதம், யானை, கோதுமை, பால், மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி இவைகட்கெல்லாம் சூரியனே காரகன்.

சந்திரன்

மாதுர், (மாதா), பராசக்தி, கணபதி, சுகபோசனம், வஸ்திரம், குதிரை, நித்திரை சிறிதுநாள் பருத்தும் இளைத்துமிருக்கும் சரீரம், சித்த சுவாதீனமின்மை, க்ஷயரோகம், சிலேத்தும சீதள நோய்கள், இடக்கண் புருவம், பீடை, உத்தியோகம் கீர்த்தி, முத்து முத்தாபரணம், வெண்கலம், வெண்ணெய், அரிசி, பணிப்பயறு, உப்பு, மச்சம், உழவன், உப்பளவர், வண்ணார், சத்திரம், கந்த புஷ்பம், சாமரம், பலம், ஸ்நானாதிகம் இவைகட்கெல்லாம் காரகன்,

செவ்வாய்

சகோதரம், பூமி, சுப்பிரமணியர், விக்கினேசுவரர், பத்திரகாளி கோபவான் குலாலன், அக்கினி, முகமாகச் செய்யுந்தொழிலினர், யுத்தம், இரத்தம், காயம், சாகசம், செம்பு, சிவந்த இரத்தின முதலானவை, பவளம், துவரை, அக்கினிபயம், விரணம், துவேஷம், கடன், சோரம், சுயம்பாகம், வீரியம், உற்சாகம், ஆட்டுவர்க்கம், சேனாதி பத்தியம், விதவை ஸ்திரீபோகம், சும்பனம், பிளவை, சடுதிமரணம் இவைகட்கெல்லாம் செவ்வாயே காரகன்,

புதன்

மாதுர் வர்க்கம் (அம்மான் முதலானவர்கள்) கல்வி, ஞானம், விஷ்ணு பகவான், வைசியன், கணக்கன், தானாதிபதி, தூதுவன், தேர்ப்பாகன், வாக்கு, சாதுர்யம், கதை, காவியம், உபாசனை யுக்தி சத்தியவசனம் வைஷ்ணவகர்மம், வியாபாரங்கள், லிகிதத்தொழில், சிற்பத்தொழில், அலி, தேர், தாதன், அந்தர நாட்டியம் முதலானவை, அண்டரோகம், வாதநோய், விஷரோகன், தாசிபரன், சகல பிரபஞ்சமுமறிந்தவன், திறவசனாதிகன், புத்திரக்குறைவு, பச்சைரத்தினம் முதலானவை, சேங்கன்றுவர்க்கம், இலை முதலியவை, பாசிப்பயறு, தாரா, வெந்தயம் இவைகட்கெல்லாம் புதனே காரகன்.

வியாழன்

புத்திரர், பிரமா, ஞானம், யோகாப்பியாசம், ஆசாரியத்துவம் அஷ்டமாசித்திகள் உபதேசம், புத்தியுக்தி, விவகார ஆலோசனை முதலானவை, இராச்சியாதி, பத்தியம், இராசசன்மானம், பட்டப்பேர், சுருதி, ஸ்மிருதி, சத்விஷயம், சாந்தம், சொர்ணம், வைடூரியம், புஷ்பராகம், (ஈமேதகம், புஷ்பம், தித்திப்பு, நேத்திரங்கள் விப்பிரவர்க்கம், ஆண்டிவர்க்கம், ரிஷிவர்க்கம், தேன், கடலை, சிரகம், இவ்வைகட்கெல்லாம் வியாழனே காரகன்.

சுக்கிரன்

களத்திரம், கிரகம், பட்டப்பேர், பகற்கால பார்வை, வெகுஸ்திரி. சங்கம், தாசிதாசன் முதலானவர். சங்கீதவாத்தியம், பரதநாட்டியம் முதலானவைகளின் பிரியம், கெந்தபுஷ்பம், புனுகு, கஸ்தூரி முதலாகிய நானாவித பரிமளவாசனாதிகள், கட்டில், மெத்தை, சப்பிரமஞ்ச முதலானவை, வெண்சாமரை, இராஜஸ்திரி, ரூபவதிபோக பாக்கியம், அழகு, இளமை, கருவிழி, சம்பத்து, வாகனம், மாலை, கொடி, டால் முதலானவை, ரத்னம், வெள்ளி, கப்பல், வியாபாரம் எப்போதும் விகடவிநோத பரியாசம் பிரசங்கப் பிரியம் ஆசை, ஸ்ரீதேவதை உபாசனை, ஜனரக்ஷகம், மித்திரம், பசு, பால், தயிர், அன்னம், மொச்சை, புளி, ஈயம் தேவபெண்கள், இலட்சுமி கடாக்ஷம் இவைகட்கெல்லாம் சுக்கிரனே காரகன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

சனி

திர்க்காயுசு, நிசிகாலத்துப்பிதா, சாத்தான் (ஐயனார்) உபாயம், ஜீவனம் எருமை விர்த்தி, இரும்பு, ஆளடிமை, சேவகா விர்த்தி, வயற்களம், கிருஷித் தொழில், நீலரத்ன முதலானவை. மரவேலை, களவு, ஆத்ம இம்சை, சிறைப்படல், இராஜ தண்டனை, வீண் வார்த்தை, வெட்கமில்லாதவை, துன்பம், வாயடித்தல், கடன், அசுபகர்மம், மயக்க போசனம், நீசஸ்திரீ, விதவைஸ்திரீ, திவாந்தர பிரவேசஸ்திரீ அல்லது ஊனமான ஸ்திரீபோகம், அலி, அவயவக் குறைவு, சித்தப்பிரமை, மேகநீர் உபத்திரவம், பித்தரோகம், கடுகு, உளுந்து, எள்ளு, எண்ணெய் இவைகட்கெல்லாம் சனியே காரகன்.

இராகு

ஞானம், பிதாமகி (பிதுர் பாட்டன் வம்சம்), பிரதாபம், செப்பிடு வித்தை, கனவு நானாவித வேடத்தொழில், சேவகதொழில், பரதேசவாசம், சாதிக்கு விரோதமாய் செய்யாத தொழில்கள் செய்தல், விகடவிநோத வித்தைகள், வியாதி ஸ்திரீபோகம் விஷபயம், ஜலகண்டம், அங்கவீனம், வெகு பேச்சு, வாயுவு வலிப்பு, பித்தம், குன்மம் வெட்டுக்காயம் பிளவை முதலிய ரோகங்கள், விலங்கு உக்ரகுடிலம், சிறைப்பாடல் இவைகட்கெல்லாம் ராகுவே காரகன்.

கேது

ஞானம், மாதரமகி (மாதுர்வழி பாட்டன் வம்சம்) கபடத்தொழில், சும்பனம், கிழ்க்குலத்தொழில், விபசாரம், பாபத்தொழில், பரதேசஜீவனம், சூனியம், தற்கொலை, குஷ்டம், உதரவலி முதலாகிய ரோகங்கள், அக்கினி கண்டம், அகங்கரம் அசுசும், சிறைப்படல் இவைகட்கெல்லாம் கேதுவே காரகன். பிதா மஹிக்கு கேதுவும் காரகனென்று கூறும் நூல்களும் சிலவுள.

நவக்கிரக காரகமென்றால் இன்னின்ன கிரகங்கள் இன்னின்ன பலன்களைக் கொடுக்க அதிகாரிகளாயிருக்கிறார்களென்பதாம்.

தமிழ் வருஷங்களுக்குச் சரியான ஆங்கில வருஷங்கள்

பிரபவ 1927-28 (87-88)
விபவ 1928-29 (88-89)
சுக்கில 1929-30 (89-90)
பிரோமதூத 1930-31 (90-91)
பிரஜோற்பத்தி 1931-32 (91-92)
ஆங்கிரஸ 1932-33 (92-93)
ஸ்ரீமுக 1933-34 (93-94)
பவ 1934-35 (94-95)
யுவ 1935-36 (95-96)
தாது 1936-37 (96-97)
ஈஸ்வர 1937-38 (97-98)
வெகுதான்ய 1938-39 (98-99)
பிரமாதி 1939-40 (99-2000)
விக்கிரம 1940-41 (2000-01)
விஷு 1941-42 (01-02)
சித்திரபானு 1942-43 (02-03)
சுபானு 1943-44 (03-04)
தாரண 1944-45 (04-05)
பார்த்திப 1945-46 (05-06)
விய 1946-47 (06-07)

சர்வசித்து 1947-48 (07-08)
சர்வதாரி 1948-49 (08-09)
விரோதி 1949-50 (09-10)
விக்ருதி 1950-51 (10-11)
கர 1951-52 (11-12)
நந்தன 1952-53 (12-13)
விஜய 1953-54 (13-14)
ஜய 1954-55 (14-15)
மன்மத 1955-56 (15-16)
துன்முகி 1956-57 (16-17)
ஹேவிளம்பி 1957-58 (17-18)
விளம்பி 1958-59 (18-19)
விகாரி 1959-60 (19-20)
சார்வரி 1960-61 (20-21)
பிலவ 1961-62 (21-22)
சுபகிருது 1962-63 (22-23)
சோபகிருது 1963-64 (23-24)
குரோதி 1964-65 (24-25)
விசுவாவசு 1965-66 (25-26)
பராபவ 1966-67 (26-27)

பிலவங்க 1967-68 (27-28)
கிலக 1968-69 (28-29)
சௌமிய 1969-70 (29-30)
சாதாரண 1970-71 (30-31)
விரோதிகிருது 1971-72 (31-32)
பரிதாபி 1972-73 (32-33)
பிரமாதீச 1973-74 (33-34)
ஆனந்த 1974-75 (34-35)
இராஷஸ 1975-76 (35-36)
நள 1976-77 (36-37)
பிங்கள 1977-78 (37-38)
காளயுக்தி 1978-79 (38-39)
சித்தார்த்தி 1979-80 (39-40)
ரௌத்ரி 1980-81 (40-41)
துன்மதி 1981-82 (41-42)
துந்துபி 1982-83 (42-43)
ருத்ரோத்காரி 1983-84 (43-44)
ரக்தாக்ஷி 1984-85 (44-45)
குரோதன 1985-86 (45-46)
அக்ஷய 1986-87 (46-47)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

லக்கின பலன் முதலியன

மேஷம்

இராஜ வெகுமானம், வெகுசனப் பிரியன், தைரியவான், அடிமையுள்ளவன், மூர்க்கன் சாமர்த்தியன், மோகி, மெலிந்த தேகவான், அடக்குமுடையவன், தனவான், புத்திமான், அனாசாரம், சஞ்சாரி, பொறுமை, அறிவு, அழகு, மனோபயம் இவைகளையுடையவன், உபயகளத்திரம், ஆயுதம், நெருப்பு, மரம், கல், சுவர் விழுதல் இந்த வகைகளிலெதினாலாவது விரணமுள்ள சரீரம், சகோதர சிரேஷ்டன். அற்ப புத்திரருடையவன், 4-5-7-10-20-22-25-28. இந்த வயதுகளில் அக்கினி, சுரம், ஜலம், சிரங்கு, வைசூரி, விஷப்பீடை, சுபர் பார்க்க, 75 வயது வரையிலிருப்பான். இந்த இலக்கினத்துக்கு சூரியன், வியாழன் இவர்கள் சுபர்கள் சனி சம்பந்தப்பட்ட வியாழன் எப்போதும் அவனுக்கேற்ற பாபபலனைக் கொடுப்பான், வியாழன், சூரியன், யோகாரகாள் இவர்கள் ஒரே ராசியிலிருந்தால் பிரபலயோகம். புதன், சுக்கிரன், சனி, இவர்கள் பாபிகள், சனி புதன் மாரர்காள் துதியாபதியாயிருந்தாலுங் கொல்லான். சனி முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால், மாரகத்துக் கொப்பாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

ரிஷபம்

ஸ்தூல தேகவான், களத்திர தோஷம், சத்தியவான், சுபகாரியபரன், பிறர் சொத்தை கிரகிக்க வல்லவன், மனோ கபடி, புருஷ வசியன், வஸ்திராபண முள்ளவன், குணதோஷமறிவன், அடிமையுள்ளவன், பிற்கால புத்திரருடையவன், 5-13-16-19-20-27 இந்த வயதுகளில் சுரம். கண்டத்தில் வியாதி, க்ஷயம், சிரங்கு, இவைகளாற் பீடை. இந்த இலக்கனத்தை சுபக் கிரகங்கள் பார்த்தால் வயது 77 வரையிலிருப்பான். சூரியனும், சனியும், நல்லவர்கள் சனியொருவனே மேலான இராஜயோகம் கொடுப்போன், சந்திரனும், வியாழனும், சுக்கிரனும் பாபிகள், சந்திரன், வியாழன், செவ்வாய், மாரகாள், புதன் கொல்லான், வியாழன் முதலானவர் கொல்லவர். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்திற்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள். சந்திரன், வியாழன், சுக்கிரன், செவ்வாய் இவர்களுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களை ஆராய்ந்து அவர்கள் நிலைகளறிந்துஞ் சொல்லவும்.

மிதுனம்

சுப காரியபரன், உதிரரோகி, இனிய வார்த்தையுடைவன், வார்த்தை சோர்வில்லாதவன், கபடி, மைதுன் அபேட்சி களத்திரத்தின் சொல்லைக் கேட்பவன், இரு களத்திரமுடையவன், வெட்கமுடையவன் கணக்கன், மூத்திர கிரிச்சனன், புகழுடையவன், விஷயாதிகள், வழக்கறிவன் 2-3-4-5-8-9-10-18-25-28 இந்த வயதுகளில் நெருப்பு, ஆயுதம், சுரம், கண்ணோய் இவைகளாற் பீடை, இந்த இலக்கனத்தை சுபக்கிரகம் பார்க்கில் 65-வயது வரையில் வாழ்ந்திருப்பான். இந்த இலக்கனத்துக்கு சூரியன், செவ்வாய், வியாழன், கொடிய பாபிகள், வியாழன், சனியுடன் சேருவானாகில் மேசராசியிற் பிறந்தோர்க்கொத்தபடி அவயோககாரனாவான் சுக்கிரன் ஒருவனே சுபன், சந்திரன் துதியாதிபத்திய தோஷத்தையுடையவனாயிருந்தாலும் மாரகங் கொடான், சூரியன், செவ்வாய், வியாழன் இவர்கள் மாரகஸ்தானங்களிலிருந்தால், மாரக சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள், குருவும் சனியும் தருமகருமாதிபதிகளாகையால் யோககாரகான் வலியறிந்து சொல்லவும்.

கடகம்

தனவான், களத்திர சுகவீனன், கபடுள்ள அவமான களத்திர முடையவன், சமர்த்துள்ளவன், குரு வீதவர்சன், அற்ப புத்திரருடையவன், வேசையர் மேலெண்ணமுடையவன், வெகுகாமி, சதாதுக்கி, பிதாவுக்கடங்காமை, 5-8-14-16-20-25-40. இந்த வயதுகளில் சுறத்தால் பேதியால் பீடை, நன்மையான கிரகம் பார்க்கில் 90 வயது வரையிருப்பான். வியாழனும் செவ்வாயும் சுபான். செவ்வாய் ஒருவரே யோககாரகன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செவ்வாய் விழாயனுங் கூடியிருந்தால் பிரபலயோகம். சூரியன் கொல்லான், சுக்கிரன் புதன் பாபிகள், புதன் சுக்கிரன் சனி மாரகாள், இவர்கள் மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

சிம்மம்

கெம்பீர வசமுள்ளவன், நல்ல புசிப்பையுடையவன், திடவான், இருதர்ரம், பாதுகர்மி மாதுர் பிதுர் துவேஷி, கோபி, தைரியவான், தனவான், பக்திமான், சகல வல்லவன், ஜனவசியன், கபடி, நேத்திரச்சிர முகரோகி வேலை செய்ய விருப்பமுடையவன். 5-10-27-30 இந்த வயதுகளில் சுரத்தால் பீடை. இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 80 வ்யது வரையிலிருப்பான், சூரியன், செவ்வாய் சுபாள், புதன், சுக்கிரன் பாவிகள், செவ்வாய் சுக்கிரன் யோககாராள், செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருந்தால் தீயபலனைக் கொடுப்பார்கள். செவ்வாய் யோகக்காரகனான போதிலும் சதுர்த்த கேந்திராதிபதி சம்பந்தத்தினால் தீயபலனைக் கொடுப்பாரென்றதாயிற்று. இவர்கள் இருவரும் கூடியிருந்தால் நல்லபலனைக் கொடுப்பார்களென்று கூறும். நூல்களும் சிலவுள. சனி சுக்கிரன் மாரகாள், புதன் கொல்லான் மாரகஸ்தானமாகிய 2-3-7 8-12-ல் இருந்தால் மாரக சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

கன்னி

தருமவான், பின்னிரக்கமுள்ளவன், மனைவிக்குப் பயந்தவன், நல்லநடத்தையுடையவன், சுபகாரியவான், மனோவஞ்சகன், பிறரால் தொழில் தனம் பெற்றுடையோன், சனப்பிரியன், இதமதிகம் இரண்டுஞ் செய்பவன். பின் வயதில் அதிக தனம் சம்பாதித்தலுமுடையவன். 5-8-10-18-19 இந்த வயதுகளில் நெருப்பு, பேதி, சுரம், வைசூரி இவைகளால் பீடை, சுபக்கிரக பார்வையுண்டாகில் 77 வயதுக்கு குறையாமிலிருப்பான். இந்த லக்கினத்திற்கு சுக்கிரனும் சனியும் சுபர்கள், சந்திரன், செவ்வாய், வியாழன் இவர்கள் பாபிகள். புதனும் சுக்கிரனும் யோககாராள், இவர்களிருவருங் கூடியிருந்தால் பிரபலயோகம். சந்திரன், செவ்வாய், வியாழன் மாரகாள், சுக்கிரன் துதியாதிபதியாயிருந்தாலும் கொல்லான், மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரக சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

துலாம்

இராஜபூஜிதன், நல்லகுணம், நல்ல புத்தி, பொறுமை, வல்லமை, அறிவு புகழ் இவையுடையவன், சம்பத்துடையவன், மன்மதசுகி, பரிமளப் பிரியன், தனவான் இரக்கமுடையவன், அபிமானி, சனப்பிரியன். சுகவான், மனோப்பீதி 7-9-10-12-19-28 இந்த வயதுகளில் அக்கினி, பேதி, சத்துரு, வைசூரி, ஜலம் இவைகளால் பீடை, இந்த இலக்கனத்தை சுபக்கிரகம் பார்த்தால் 65 வயது வரையில் வாழ்ந்திருப்பான். இந்த லக்கினத்துக்கு சனி, புதன், சுக்கிரன் சுபர்கள், சூரியன், செவ்வாய், வியாழன் பாவிகள், சந்திரனும் புதனும் யோககாராள், இவர்களிருவருங் கூடியிருந்தால் பிரபல யோகம். சூரியன், வியாழன், மாரகாள், செவ்வாய் துதியை சப்தமாதியாருந்தாலும் கொல்லான், மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12 ல் இருந்தால் மாரகத்துக்கொப்பாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

விருச்சிகம்

புத்திமான், தனவான், வெகுமானி, வஞ்சகன், அவமானி, இனிமையாகப் பேசுவான், பந்துஜன துவேஷி எடுத்த காரியத்தை முடிப்பான், வரையற்ற விஷயப்பிரியன் மனைவியிடத்தில் அதிகப்பிரியமுள்ளவன் 4-5-10-12-18-40 இந்த வயதுகளில் கண்டதோஷம், சுரம், அக்கினி, சன்னி, இவைகளாற் பீடை, இந்த லக்கினத்தை உத்தம கிரகம் நோக்கில் 90 வயது வரையிலிருப்பான். சூரிய, சந்திரனும் வியாழன் சுபர்கள், செவ்வாய் புதன், சுக்கிரன், பாபிகள், சூரியனும், சந்திரனும் யோககாராள். இவர்களிருவருங் கூடியிருந்தால் பிரபலயோகம். புதன், செவ்வாய், சுக்கிரன் மாரகாள், வியாழன் சனி கொல்லார்கள். புதன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமான கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தனுசு

சத்தியவான், நற்குணமுடையவன், அபிமானி, நல்ல வசனமுள்ளவன், சுகவான், தனவான், யோகவான், மித்திரன், மேல் நாடுகளில் சஞ்சாரி, சதா உத்தியோகபரன், 3-4-5-12-18-32-40-47 இந்த வயதுகளில் கண்ணோய்யாலும் உஷ்ண ரோகத்தாலும் பீடை, லக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் 77 வயது வரையிலிருப்பான். சூரியனும் செவ்வாயும் சுபர்கள். சுக்கிரன் ஒருவனே பாவி, சூரியனும் புதனும் கூடியிருந்தால் பிரபல யோகம், சுக்கிரன் புதன் மாரகாள் சந்திரன் சனி கொல்லார்கள். சுக்கிரன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

மகரம்

லக்ஷாதிபதி திடபுத்திமான், சுபகாரியபரன், உபாயமுள்ளவன், கோபி. வாய்ச் சால்கன், அபிமானி, பரிமளப்பிரியன், மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், 3-4-5-7-8-10-12-32-37 இந்த வயதுகளில் ஜலம், சுரம், விஷம் இவைகளால் பீடை, இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 67 வயது வரையிலிருப்பான். செவ்வாய் புதன், சுக்கிரன் சுபர்கள். சந்திரன் வியாழன் பாவிகள், சுக்கிரன் ஒருவனே யோககாரகன். சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் இராஜயோகம். சூரியன் சனி கொல்லார்கள். சந்திரன் வியாழன் மாரகாள், மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

கும்பம்

சிநேகிதர்களை யுபாதிப்பவன், ஸ்தீரிகளுக்குப் பிரியமுள்ளவன், அகண்ட வயிறுடையவன், சுகவான், திடசித்தமுள்ளவன். இருதாரம், தன்னையே புகழ்ந்து பேசுபவன், குள்ளன், சிவந்த கண்ணையுடையவன், ஒருவர் செய்யும் உபகாரத்தை உடனே மறந்து விடுகிறவன். அற்பகல்வியுடையவன், பைத்திய சரீரமுடையவன், 9-10-11-20-30-32 இந்த வயதுகளில் சுரம், மிகுந்த சன்னி, வாதசுரம், பித்தசுரம் இவைகளால் பீடை. இந்த லக்கினத்தை சுபர்கள் பார்த்தால் 80 வயது வரையிலிருப்பான், சுக்கிரன், புதன், சனி சுபர்கள், சந்திரன், செவ்வாய், வியாழன், பாபிகள் சுக்கிரன் ஒருவனே யோககாரகன், சுக்கிரன் செவ்வாய், கூடியிருந்தால் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள். வியாழன் துதியாதிபதியா யிருந்தாலுங் கொல்லான். சந்திரன் செவ்வாய் மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

மீனம்

ஞானி, பிராமணர், பெரியோரிடத்தில் பக்தி விசுவாசமுடையவன், சந்நியாசி, சௌந்தரிய ரூபமும், சௌகரியமும், திரவியமுடையவன், பரிமளப்பிரியன், வெகுசெலவாளி, இரக்கமுள்ளவன், முன் ஜாக்கிரதையுள்ளவன், குளிர்ச்சியான கண்களும் கர்ணரோகமுடையவன் 3-4-7-12-20-28 இந்த வயதுகளில் இருமல், சுரம், உஷ்ணரோகம் இவைகளாற் பீடை, இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 90 வயது வரையிலிருப்பான். சந்திரன், செவ்வாய், சுபர்கள், சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் பாவிகள், செவ்வாயும் குருவும் யோககாரர்கள், செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி, இவர்கள் மாரகாள், செவ்வாய் கொல்லான், சூரியன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள். கிரகங்களுடைய வலிமையை யூகித்துச் சொல்லுக.

12 இராசிகளின் நாழிகை

	நா	வி.		நா	வி.		நா	வி.
மேஷம்	4	15	சிம்மம்	5	15	தனுசு	5	30
ரிஷபம்	4	45	கன்னி	5	0	மகரம்	5	15
மிதுனம்	5	15	துலாம்	5	0	கும்பம்	4	45
கடகம்	5	30	விருச்சிகம்	5	15	மீனம்	4	15

ஆக 60 நாழிகை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பல்லி விழுதலின் பலன்



தலையில்-கலகம், குடுமி-சுகம், கூந்தல்-லாபம். முகம், பந்து தரிசனம், சிரசு-மரணம், நெற்றியில் பட்டாபிஷேகம், வலப்புருவம், இடப்புருவம்-ராஜானுக்கிரகம், வலது இடது புருவ மத்தியில்-புதல்வர் நாசம், வலக்கபாலம்-சம்பத்து, இடக்கபாலம்-அன்புதரிசனம். வலக்கண்-சுபம், இடக்கண்-கட்டுப்படுதல். மூக்கு-வியாதி, மூக்குநுனி-விசனம், மேல்உதடு-பொருள் நாசம். கீழ்உதடு-தனலாபம், மோவாய்கட்டை ராஜதண்டனை, வாய்-பயம் வலது காது-தீர்க்காயுசு, இடதுகாது-வியாபாரம், கழுத்து-சத்ருநாசம். வலது புஜம்-ஆரோக்கியம், இடதுபுஜம்-ஸ்திரீ சுகம், வலக்கை-துக்கம், இடக்கை-துயரம், வலது மணிக்கட்டு- பீடை, இடது மணிக்கட்டு-கீர்த்தி, வலதுகை விரல்-ராஜசன்மானம், இடக்கை விரல்-துயர வலஇடுகை விரல்கள்-தனநாசம், மார்பு-தனலாபம், வலது இடது ஸ்தனங்கள்-பாபசம்பவம், இருதயம்-சௌக்கியம், தேகம்-தீர்க்காயுள், வலது விலா எலும்பு-வாழ்வு, இடது விலா எலும்பு-மரணம், வயிறு-தான்யலாபம், நாபி-ரத்தின லாபம், உபய பாரிசம்-லாபகரம் அடைதல், முதுகில்-நாசகம். ஆண் குறி-தரித்திரம், வலது இடது அபானம்-தனமுண்டு, வலது இடது தொடைகள்-பிதா அரிஷ்டம்,. வலது இடது முழங்கால்கள்-சுபம், வலது இடது கணுக்கால்கள்-சுபம், வலது இடது பாதங்கள்-பிரயாணம், வலதுபாதம்-ரோகம், இடதுபாதம்-துக்கம், பிருஷ்டம் (சுபம்) வலது பாத விரல்கள்-ராஜபயம், இடது பாதவிரல்கள்-நோய், வலது இடது கால்விரல் நகங்கள்-தனநாசம், தேகத்தில் ஓடல்-தீர்க்காயுள்.

குறிப்பு:- (காஞ்சிபுரம்) ஸ்தலத்தில் உள்ள வெள்ளி பல்லி, (அல்) பொன் பல்லியை கைகளால் தொட்டு நமஸ்கரிக்க (பல்லி விழுதல்) பரிகாரம்.

ஆகாயம், பூமி 8 திக்குகளுக்கு பல்லி சொல்லுக்குப் பலன்

திக்கு	ஞாயி	திங்கள்	செவ்	புதன்	வியா	வெள்ளி	சனி
கிழக்கு	பயம்	தனலாபம்	சம்பத்து	சந்தோஷ	அசுபம்	சுபசெய்	நற்செய்
தெ.கிழக்கு	தீமை	கலகம்	பந்துலா	தனலாபம்	சன்மான	அலங்கா-	திரவிய
தெற்கு	சுகம்	பகை	வியசனம்	சரீரபீடை	தனபால	பந்துவர	ராஜதரிச
தெ.மே	பந்துவர	விரோதம்	சத்துரு	பந்துஆணி	காரியசித்	நற்கேள்	ரோகம்
மேற்கு	சண்டை	ராஜதரிச	அனுகூல	பயம்	நஷ்டம்	சந்தோ	வஸ்திர
வட.மே	வஸ்திர	அமங்கல	தூரதே	தனநாசம்	நற்செய்தி	கலகம்	ஸ்திரீபோ
வடக்கு	மணிலா	வஸ்திரலா	சத்ருபய	கலகம்	காரியஆ	கலகம்	நற்செய்தி
வட.கிழ	லாபம்	கல்யாண	வாகனம்	காரியஆகா	போஜனம்	சத்ருபய	திருடர்பய
ஆகாயம்	ஜெயம்	கேடு	பிராயண	நற்செய்தி	கலகம்	வஸ்துலா	காரியஆ
பூமி	காரிய.ஆ	ஐஸ்வரிய	மிகலாப	ஐஸ்வரியம்	நஷ்டம்	சூதகஸ்	காரியசித்

கர்ப்போட்டம் நாட்கள் விபரம்

ஆதித்தன் வில்லில் அமைந்த நாளொன்பதின் மேல்
போதுற்ற கர்ப்பம் பொதுவொரு நாள்
வேத மகரமுத வேறளவும் மாத முக்கால்
நாளாக பகலிரவு கொண்டு வரும் பானு

மார்கழி மீ 9-தேதிக்கு மேல்	...	9 நாள்
பொதுவாக கர்ப்பம்	...	1 நாள்
தை மாதம் முதல் வைகாசி மாதம் வரையில் மாதம் 5-க்கு 3/4 நாழிகை (பகலும் இரவும் சேர்ந்து)	...	8 3/4 நாள்
ஆக மொத்தம்	....	13 3/4 நாள்

மார்கழி மீ த்தில் 13 3/4 தேதிக்கு மேல்

பானு தனுவிற் பதிமூன்றே முக்கால் மேல்
ஆனிக்கு கர்ப்பம் அறுகாலம்-மானேகேன்
நண்டு முதற் றேளளவு நாலரை நாள்
மாகாணி கொண்டுதனுவிற்கொன்றே கூறு

ஆனிக்கு	1 1/2-நாள்
ஆடிக்கு	2 1/4- „
ஆவணிக்கு	2 1/4- „
புரட்டாசிக்கு	2 1/4- „
ஐப்பசிக்கு	2 1/4- „
கார்த்திகைக்கு	2 1/4- „
மார்கழிக்கு	1- „
ஆக கர்ப்போட்டம்	13 3/4 நாட்கள் „

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சில முக்கிய நகரங்களின் நிரயன இராசிகளின் காலஅளவு (நாழிகை - வினாடிகளில்)

பாகை	ஊர்கள்	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன
1°	சிங்கப்பூர்	4-51	5-14	5-22	5-04	4-46	4-42	4-53	5-17	5-21	5-01	4-41	4-38
3°	கோலாலம்பூர்	4-48	5-12	5-23	5-07	4-49	4-45	4-57	5-19	5-20	4-58	4-38	4-34
5°	பினாங்கு	4-44	5-10	5-24	5-11	4-53	4-49	5-01	5-21	5-19	4-55	4-34	4-29
7°	கொழும்பு, கண்டி	4-41	5-08	5-24	5-13	4-56	4-52	5-05	5-23	5-19	4-54	4-30	4-25
8°	கன்னியாகுமரி, திருவனந்தபுரம்	4-39	5-07	5-25	5-14	4-58	4-54	5-07	5-24	5-19	4-53	4-28	4-22
9°	நெல்லை, திரிகோணமலை இராமேஸ்வரம், தூத்துக்குடி	4-37	5-06	5-25	5-16	5-00	4-56	5-09	5-25	5-19	4-51	4-26	4-20
10°	மதுரை, கொடைக்கானல், திண்டுக்கல், புதுக்கோட்டை,யாழ்ப்பாணம்	4-35	5-06	5-25	5-18	5-02	4-58	5-11	5-25	5-19	4-50	4-24	4-17
11°	கோவை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, நீலகிரி, தேவகோட்டை,நாகபட்டினம்	4-33	5-05	5-26	5-20	5-04	5-00	5-13	5-26	5-19	4-48	4-21	4-15
12°	சிதம்பரம், சேலம், திருவையாறு, புதுச்சேரி,	4-31	5-05	5-26	5-21	5-06	5-02	5-14	5-27	5-19	4-47	4-19	4-13
13°	சென்னை, செங்கல்பட்டு ஆற்காடு, காஞ்சி	4-29	5-04	5-27	5-22	5-08	5-04	5-16	5-28	5-19	4-46	4-17	4-11
14°	அனந்தப்பூர், நெல்லூர்	4-27	5-03	5-28	5-23	5-10	5-06	5-18	5-29	5-18	4-44	4-15	4-09
15°	பெல்லாரி, குந்தி,	4-25	5-02	5-28	5-25	5-12	5-08	5-19	5-30	5-18	4-43	4-13	4-07
16°	கர்நூல், குண்டூர், மசூலிப்பட்டினம்,	4-23	5-01	5-28	5-27	5-14	5-10	5-21	5-31	5-18	4-41	4-11	4-05
17°	ஐதரபாத், விஜயவாடா, இரங்கூன்	4-21	5-00	5-29	5-29	5-16	5-12	5-23	5-32	5-17	4-39	4-09	4-03
18°	விஜயநகரம், விசாகை, ஸ்ரீகாகுளம், பூனா	4-19	4-58	5-29	5-31	5-19	5-15	5-26	5-33	5-17	4-37	4-06	4-00
19°	பம்பாய், கோவா.	4-17	4-57	5-29	5-33	5-22	5-18	5-28	5-35	5-16	4-35	4-03	3-57
22°	கல்கத்தா	4-14	4-53	5-30	5-37	5-28	5-23	5-33	5-39	5-15	4-31	3-59	3-51
28°	டெல்லி	3-54	4-45	5-33	5-51	5-46	5-43	5-51	5-47	5-11	4-17	3-41	3-31

முக்கிய ஊர்களின் உதயாதி கால மணி, நிமிடம் வித்தியாசங்கள்

ஊர்கள்	காலவித்தியாசம்		ஊர்கள்	காலவித்தியாசம்		ஊர்கள்	காலவித்தியாசம்	
	மணி	நிமி.		மணி	நிமி.		மணி	நிமி.
அலகாபாத்	+ 0	7	கோயமுத்தூர்	—0	13	பம்பாய்	—0	29
ஆற்காடு	—0	4	சிங்கப்பூர்	+ 1	34	பினாங்கு	+ 1	20
ஐதராபாத்	—0	7	சேலம்	—0	8	புதுச்சேரி	—0	2
கண்ணனூர்	—0	19	டெல்லி	—0	12	பூனா	—0	25
கல்கத்தா	+ 0	32	தஞ்சாவூர்	—0	5	பெங்களூர்	—0	11
கன்னியாகுமரி	—0	11	திருச்சி	—0	6	மங்களூர்	—0	21
காசி	+ 0	11	திருநெல்வேலி	—0	10	மதுரை	—0	9
காஞ்சிபுரம்	—0	2	திருவனந்தபுரம்	—0	13	மைசூர்	—0	14
குண்டூர்	+ 0	1	நாகப்பட்டினம்	—0	1	யாழ்ப்பாணம்	—0	1
கும்பகோணம்	—0	3	நாக்பூர்	—0	4	இரங்கூன்	+ 1	4
கூடலூர்	—0	2	நீலகிரி	—0	14	இராமேஸ்வரம்	—0	3
கொழும்பு	—0	1	நெல்லூர்	—0	1	விசாகப்பட்டினம்	+ 0	12

அன்றைய சூரிய உதய மணி நிமிடத்திலிருந்து கூட்டி, கழித்து பார்க்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

எண் ஜோதிடம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களை பிறந்த தேதியாக (ஆங்கில தேதி) கொண்டிருந்தால் அந்தந்த எண்களுக்குரிய நல்ல, தீய பலன்களை அறிந்து கொள்ளலாம்.

எண். ஆங். தேதி	அதிர்ஷ்ட தேதி	துரதிர்ஷ்ட தேதி	அதிர்ஷ்ட வர்ணம்	துரதிர்ஷ்ட வர்ணம்	அதிர்ஷ்ட உலோகம் கற்கள்
1, 10, 19, 28	1, 10, 19, 28	8, 17, 26	மஞ்சள், பொன் நிறம்,வெளிர்சிகப்பு வெளிர்நீலம்	கருப்பு பாக்குகலர்	தங்கம், மாணிக்கம் டோபாஸ் கற்கள் மஞ்சள் புஷ்பராகம்
2, 11, 20, 29	7, 16, 25 1, 10, 19, 28	8, 9, 18, 26	லேசான பச்சை, வெளிர் மஞ்சள், வெள்ளை	கருப்பு,சிவப்பு, ஆழ்ந்த நீலம்	வெள்ளி, பொன் வெள்ளி கலந்தது. முத்து,பச்சை,வைடூரியம்
3, 12, 21, 30	3, 9, 12, 18 21, 27, 30	6, 15, 24	ஆரஞ்சு, ரோஸ், தாமரைப்பூவர்ணம்	கருநீலம்,கருப்பு ஆழ்ந்த பச்சை	செவ்வந்தி கல் புஷ்பராகம்
4, 13, 22, 31	1, 10, 19, 28	8, 17, 26	வெளிர்நீலம் மஞ்சள்	கருப்பு	நீலக்கல் கோமேதகம்
5, 14, 23	5, 9, 14,18,23	27	சாம்பல் வர்ணம்	பச்சை,கருப்பு	வைரம், ஸர்க்கன்
6, 15, 24	6, 9, 15, 18, 24, 27	3, 12, 21, 30	ஆழ்ந்த பச்சை நீலம், சிகப்பு கலந்த வர்ணம்	வெள்ளை மஞ்சள் ரோஸ்	மரகதம், ஜேட் டர்குவாய்ஸ்
7, 16, 25	2, 11, 20, 1, 10, 19	7, 8, 16, 17, 26	லேசான மஞ்சள் வெளிர் பச்சை நீலம், வெள்ளை	கருப்பு சிவப்பு	வைடூரியம், முத்து, சந்திரகாந்தக்கல்
8, 17, 26	1, 10, 19, 9, 18, 27	8, 17, 26	மஞ்சள், ஆழ்ந்த பச்சை, நீலம்	கருப்பு,பாக்கு கலர், சிவப்பு	நீலக்கல்
9, 18, 27	5, 14, 23, 9, 18, 6, 15, 24,23,30,1,16	2, 11, 20, 29	சிவப்பு, கருஞ் சிவப்பு, நீலம்	வெளிர்பச்சை வெண்மை மிகுந்தவர்ணம்	பவளம் பிளட்ஸ்டோன், பச்சை நிறக்கல்

தேவதா பிரதிஷ்டை: உத்தராயணம் தை, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, சுக்லபக்ஷம் பலயுகதமான சந்திரன், குரு-சுக்கிரன் அஸ்தமம் இல்லாக்காலம் அவர்கள் அதிபதிகளாகிய லக்கினம், ஆகாசம், நிர்மலமாயும் இதரவித உத்பாதாதி துர்சகுனங்களில் இல்லாமலுமிருக்க, ரோக, மிருக, புனர்பூசம், உத்திரம், அஸ்தம், சுவாதி, ரேவதி உத்தமம். மூலம், அவிட்டம், மத்திமம், சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, பர்வதுவயம் கூடாது. சந், புத, குரு, சுக்கிர, வார லக்னாம்சங்கள், சுபர்கள் கேந்திரம், லக்னம், நவமம் இவைகளிலும் பாபர்கள் திரிதியம் ஏகாதசங்களிலுமிருக்க ஷஷ்டத்தில் சந்திரன் இல்லாமலும் அஷ்டம சுத்தியுமான லக்னம் பிரசஸ்தம், ஸ்திரீ தேவதைகளுக்கும் சர, உபய, லக்னங்களும், புருஷ தேவதைகளுக்கு சரலக்னங்களும் உத்தமம். கத்திரியோக லக்னம் சகல தேவதைகளுக்கும் கூடாது.

மழை விஷயம்

பாநு மத்யம்: புத சுக்ராளுக்கு நடுவில் சூரியன் நடப்பது, அக்காலத்தில் மழை இல்லை.

புதன், சுக்கிரன், ஸாமீப்யம்: புத சுக்ராளுக்கு ஒரு பக்கத்தில் சூரியன் நடப்பது அக்காலத்தில் நல்ல மழை. ஷெ ஸாமீப்யம். அசுவனி, பரணி கிருத்திகையாகில் அதிவிருஷ்டி. ரோகிணி, மிருகசிரிஷம், திருவாதிரையால் அநாவிருஷ்டி, புனர்பூசம், பூசம், ஆயில்யமாகில், சுவ்ருஷ்டி, மகம் முதல் விசாகம் வரையிலுமாகில் பிரளயமாக வர்ஷிக்கும், அனுஷம் முதல் பூரட்டாதி வரையிலுமாகில் மஹா க்ஷாமம் மழையில்லை. உத்திரட்டாதி, ரேவதியாகில் சுபிக்ஷம், பாநுமத்யமில்லாத காலங்களில் புதசுக்ர ஸாமீப்யம் நேரிடில் சுபிக்ஷம், சித்தா நவகத்தில் பாநுமத்யமுண்டானால் துர்பிக்ஷம், ஸாமீப்யமாகில் சுபிக்ஷம். கிழக்கேஸ்வாதித்ரயத்திலாவது மேற்கே மகபஞ்சகத்திலாவது சுக்ரனிருந்தால் மழை கிடையாது. இதற்கு எதிராகவிருந்தால் பஹு வர்ஷம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முக்குண வேளை

பகல் மணி	ஞாயிறு புத-சனி	திங்கள் வியாழன்	செவ்வாய் வெள்ளி	இரவு மணி	ஞாயிறு புத-சனி	திங்கள் வியாழன்	செவ்வாய் வெள்ளி
6 - 7½	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்	6 - 7½	ராஜஸம்	தாமஸம்	சாத்வீகம்
7½ - 9	சாத்வீகம்	ராஜஸம்	தாமஸம்	7½ - 9	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்
9 - 10½	ராஜஸம்	தாமஸம்	சாத்வீகம்	9 - 10½	சாத்வீகம்	ராஜஸம்	தாமஸம்
10½ - 12	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்	10½ - 12	ராஜஸம்	தாமஸம்	சாத்வீகம்
12 - 1½	சாத்வீகம்	ராஜஸம்	தாமஸம்	12 - 1½	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்
1½ - 3	ராஜஸம்	தாமஸம்	சாத்வீகம்	1½ - 3	சாத்வீகம்	ராஜஸம்	தாமஸம்
3 - 4½	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்	3 - 4½	ராஜஸம்	தாமஸம்	சாத்வீகம்
4½ - 6	சாத்வீகம்	ராஜஸம்	தாமஸம்	4½ - 6	தாமஸம்	சாத்வீகம்	ராஜஸம்

மேஷம், ரிஷபம், துலாம், விருச்சிகம் லக்கினங்களுக்கு தாமஸமும் சாத்வீகமும் மிதுனம், சிம்மம், மகரம், கும்பம் லக்கினங்களுக்கு சாத்வீக ராஜஸமும், கடக, கன்னியா, தனுசு, மீனம் லக்கினங்களுக்கு தாமஸ ராஜஸமும் உத்தமமாம். மற்றவை பொருத்தமில்லை.

தோஷமற்ற காலம் : உதயகாலத்தில் திதி தோஷமும், அபிஜித் காலத்தில் (12½ நாழிகைக்கு மேல் 15 நாழிகைக்குள்) நக்ஷத்திர தோஷமும், அஸ்தமயக்காலத்தில் லக்கின தோஷமும், ராத்திரியில் வார தோஷமுமில்லை.

மாத சூன்யம் : சித்திரை மீ : அஷ்டமி, ஏகாதசி, ரோகிணி, கும்பம், வைகாசி மீ : துவாதசி, சித்திரை, சுவாதி, உத்திராடம், ஆனி மீ : திரயோதசி, புனர்பூசம், ரிஷபம் ஆடி மீ : சஷ்டி, அவிட்டம், மிதுனம், ஆவணி மீ : அமாவாசை, பூரணை, பூராடம், மேஷம், புரட்டாசி மீ : சப்தமி, சதயம், பூரட்டாதி, ரேவதி, கன்னி, தனுசு, ஐப்பசி மீ : நவமி, பூரட்டாதி, விருட்சிகம், கார்த்திகை மீ : பஞ்சமி, கிருத்திகை, பூரம், மகம், துலாம், மார்கழி மீ : துதியை, நவமி, அனுஷம், உத்திரட்டாதி, விசாகம், தனுசு, தை மீ : பிரதமை, அஸ்தம், திருவாதிரை, ஆயில்யம், கடகம், மாசி மீ : சதுர்தசி, தசமி, மூலம், திருவோணம், மகரம், பங்குனி மீ : சதுர்த்தி, பரணி, கேட்டை, சிம்மம், இப்படி வரின் சுபகாரியங்களுக்கு விலக்காம்.

நாள், விழிப்பு : புதன், வியாழன், வெள்ளி இரு கண்ணுள்ள நாட்கள். ஞாயிறு, திங்கள் ஒரு கண்ணுள்ள நாட்கள். செவ்வாய், சனி குருட்டு நாட்கள்.

மூலத்திரிகோணம் : சூரியனுக்கு சிம்மமும், சந்திரனுக்கு கடகமும், செவ்வாய்க்கு மேஷமும், புதனுக்கு கன்னியும், குருவுக்கு தனுசும், சுக்கிரனுக்கு துலாமும், சனிக்கும் இராகுக்கும் கும்பமும், கேதுக்கு சிம்மமும், குளிகனுக்கு மீனமும் மூலத்திரிகோணம் ஆகும்.

அஷ்ட வர்க்கம்

	சூரியன்-48	சந்திர-49	அங்கார-39	புதன்-54	குரு-56	சுக்ரன்-52	சனி-39
சூரி	1, 2, 4, 7, 8, 9, 10, 11 -8	3, 6, 7, 8, 10, 11 -6	3, 5, 6, 10, 11 -5	5, 6, 9, 11, 12 -5	1, 2, 3, 4, 7,8, 9, 10, 11 -9	8, 11, 12 -3	1, 2, 4,7,8, 10, 11 -7
சந்	3, 6, 10, 11 -4	1, 3, 6, 7, 10, 11 -6	3, 6, 11 -3	2, 4, 6, 8, 10 11 -6	2, 5, 7, 9 11 -5	1, 2, 3, 4, 5,8 9, 11, 12 -9	3, 6, 11 -3
அங்	1, 2, 4, 7, 8, 9, 10, 11 -8	2, 3, 5, 6, 9 10, 11 -7	1, 2, 4, 7, 8, 10, 11 -7	1, 2, 4, 7, 8,9 10, 11 -8	1, 2, 4, 7, 8, 10, 11 -7	3, 5, 6, 9, 11 12 -6	3, 5, 6, 10 11, 12 -6
புத	3, 5, 6, 9, 10 11, 12 -7	1, 3, 4, 5, 7,8 10, 11 -8	3, 5, 6, 11 -4	1, 3, 5, 6, 9, 10, 11, 12 -8	1, 2, 4, 5, 6 9, 10, 11 -8	3, 5, 6, 9, 11 -5	6, 8, 9, 10 11, 12 -6
குரு	5, 6, 9, 11 -4	1, 4, 7, 8, 10 11, 12 -7	6, 10, 11 12 -4	6, 8, 11, 12 -4	1, 2, 3, 4, 7, 8, 10, 11 -8	5, 8, 9, 10, 11 -5	5, 6, 11 ,12 -4
சுக்	6, 7, 12 -3	3, 4, 5, 7, 9 10, 11 -7	6, 8, 11, 12 -4	1, 2, 3, 4, 5,8 9, 11 -8	2, 5, 6, 9, 10, 11 -6	1, 2, 3, 4, 5,8, 9, 10, 11 -9	6 ,11 ,12-3
சனி	1, 2, 4, 7, 8, 9, 10, 11 -8	3, 5, 6, 11, -4	1, 4, 7, 8, 9 10, 11 -7	1, 2, 4, 7, 8,9, 10, 11 -8	3, 5, 6, 12, -4	3, 4, 5, 8, 9, 10, 11 -7	3, 5, 6, 11 -4
லக்	3, 4, 6, 10, 11, 12 -6	3, 6, 10, 11, -4	1, 3, 6, 10, 11 -5	1, 2, 4, 6, 8, 10, 11 -7	1, 2, 4, 5, 6, 7, 9, 10, 11 -9	1, 2, 3, 4, 5,8, 9, 11 -8	1,3, 4, 6,10 11 -6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அமிர்தாதி யோகங்கள்

வாரம்	அசு	பர	கிரு	ரோ	மிரு	திரு	புன	பூச	ஆயி	மகம்	பூரம்	உத்	அஸ்	சித்	சுவா	விசா	அனு	கேட்	மூல	பூரா	உத்ர	திர	அவி	சத	பூரட்	உத்ட்	ரேவ
ஞாயிறு	சி	சி	கி	சி	சி	சி	சி	சி	சி	ம	சி	அ	அ	சி	சி	ம	ம	ம	அ	சி	அ	அ	ம	சி	சி	அ	அ
திங்கள்	சி	சி	ம	அ	அ	சி	அ	சி	சி	ம	சி	சி	சி	ம	அ	ம	சி	சி	சி	ம	ம	அ	சி	சி	ம	சி	சி
செவ்	சி	சி	சி	அ	சி	ம	சி	சி	சி	சி	சி	அ	சி	சி	சி	ம	சி	சி	அ	சி	ம	சி	சி	ம	ம	அ	சி
புதன்	ம	சி	அ	சி	சி	சி	சி	சி	சி	சி	அ	அ	ம	சி	சி	சி	சி	சி	ம	அ	அ	சி	ம	சி	அ	சி	ம
வியாழ	அ	சி	ம	ம	ம	ம	அ	அ	சி	அ	சி	ம	சி	சி	அ	சி	சி	சி	சி	சி	சி	சி	சி	ம	சி	சி	சி
வெள்ளி	அ	சி	சி	ம	சி	சி	சி	ம	ம	ம	சி	சி	அ	சி	சி	சி	சி	ம	அ	சி	சி	ம	சி	சி	சி	சி	அ
சனி	சி	சி	அ	அ	சி	சி	சி	சி	ம	சி	சி	ம	ம	ம	அ	சி	சி	சி	சி	சி	சி	சி	சி	அ	ம	சி	ம

குறிப்பு:- அ-அமிர்தயோகம், சி-சித்தயோகம், ம-மரணயோகம் என அறியவும் சித்தயோகம்-அமிர்தயோகம் நல்லது

மனையடி சாஸ்திரம்

மனையடி சாஸ்திரப் பிரகாரமாக வீடு கட்டுவதற்கும் வீட்டிற்குள் அறைகள் கட்டுவதற்கும் அவ்வீட்டின் எஜமானனால் காலடி அளந்ததின்பேரில் அந்த அடியைக் கண்டு அறிந்துள்ள அகலத்திற்கும் நீளத்திற்கும் பலன்கள் அறியவும். 6. நன்மை 7. தரித்திரம் 7½ நன்மை, 8. இராச்சியம், 9. கெடுதல், 10. பாக்கியம், 11. புத்திர சம்பத்து, 12. பகையால் உபத்திரம், 13. வியாதி, 14. மனக்கவலை, 15. துன்பம், 16. மிகுந்த செல்வமுண்டு, 17. சத்ரு பயம், 18. துன்பம், 19. புத்திரக்கவலை, 20. வீட்டை விட்டோட்டும், 21. ஆடு மாடு ஜீவராசிகள் மரணம். 22. சோபனமுண்டு, 23. நஷ்டம், 24. திருடு பயம், 25 மனைவி மரணம், 26. வருமானம், 27. கடன்தொல்லை, 28. ஆயிசு செல்வம், 29. புத்திர நஷ்டம், 30. கட்டுமுன் ஓட்டம், 31. தரித்திரம், 32. திரவியம் உண்டு, 33. இருகளத்திரம், 34. குதிரை கட்டுவான், 35. வழக்குடையவன், தொந்தரவு கொடுப்பான், 36. ஊரை விட்டோட்டும், 37. ஆண்புத்திரன் ஜெனனம். 38. வியாதியஸ்தன், 39. ராஜ சன்மானம், 40. மனைவி வாழமாட்டாள், .41. பாக்கியம், 42. கீர்த்தியாளன், 43. ராஜ தண்டம், 44. அங்கஹீனம் ஏற்படும், 45. சற்புத்திரனுண்டு, 46. மனசுவாசம், 47. சூன்யாதிகளுண்டு, 48. தியினால் நஷ்டம், பொருள்சேதம், 49. மலடாவான், 50. யாவருக்கும் மேலாவான். 51. வம்பு வழக்கு ஏற்படும். 52, தான்னிய பலிதம் சுகம், 53. கள்ளன் அந்நியஸ்திரி தொடர்பு, 54. ராஜ வாழ்வு, உறவினர் பகை. 55. பந்து ஜன விரோதம், 56. புத்திர உற்பத்தி, 57. புத்திர அற்பம், 58. விரோதமுண்டு, 59. சுபதரிசனம். 60. பொருள் விருத்தி, 61. பகை உண்டு, 62. வறுமை உண்டாகும், 63. இருப்பு குலையும், 64. வெகு சம்பத்துண்டு, 65. ஸ்திரி நாசம், 66. புத்திர பாக்கியம், 67. பயம் உண்டு, 68. திரவிய லாபம். 69. அக்னி உபாதை, 70. அந்நியர்க்கு பலன், 71. இராசியப்பிரியம், 72. வெகு பாக்கியம், 73. குதிரை கட்டி வாழ்வான், 74. பிரபல விருத்தி, 75. சுகம் உண்டு, 76. புத்திர அற்பம், 77. ஆனை கட்டி வாழ்வான், 78. புத்திர அற்பம், 79. கன்று காலி விருத்தி, 80. லெக்ஷிமி வாசம் 81. இடி விழும், 82. கர்த்தரி தோஷம் உண்டு, 83. மரண பயம், 84. சௌக்கியம், 85. சீமான் ஆவான், 86. இம்சை உண்டு, 87. தண்டிகை உண்டு, 88. சௌக்கியம், 89. பலவீடு கட்டுவான், 90. யோக பாக்கியமுண்டு, ,91. வித்துவாசம் உண்டு, 92. ஐஸ்வரியம், 93. தேசாந்திரம் வாழ்வான், 94. அந்நிய தேசம் போவான், 95. தனவான் ஆவான்., 96. பிரதேசங்கள் போவான், 97. கப்பல் வியாபாரம் போவான், 98. பிரதேசங்கள் போவான், 99. இராஜியம் ஆள்வான், 100. ஷேமத்துடன் வாழ்வான்.

அவரவர்கள் ஜெனித்த ராசிக்கு வாசற் பொருத்தம்: ரிஷபம், மிதுனம், கடக ராசியில் ஜெனனமானவர்கள் வடக்கு வாயில் வீடும், சிம்மம், கன்னி, துலாம் ராசியில் ஜெனனமானவர்கள் கிழக்கு வாயில் வீடும், தெற்கு வாயில் வீடும், விருட்சிகம், தனுசு, மகரம் ராசியில் ஜெனனமானவர்கள் தெற்கு வாயில் வீடும், கும்பம், மீனம், மேஷம் ராசியில் ஜெனனமானவர்கள் தெற்கு வாயில் வீடும் கட்டினால் சுபங்கள் விசேஷமாக நடக்கும்.

கிழமை பலன் அறிய

ஞாயிறு—குரோதமுண்டு, திங்கள்—நாளுக்கு நாள் முன்னேற்றம் சுபம். செவ்வாய்—பழம் பொருள் புதுப்பொருள் கைவிட்டு போகும், தனநஷ்டம். புதன்—லட்சுமிகரம் பாக்கியம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வியாழன்—புத்திர சம்பத்து. தனதான்ய சம்பத்து வெள்ளி—சகல காரியானுகூலம் நன்மை, சனி—திருடு பயம், கஷ்டம்.

நக்ஷத்திர பலன் அறிய

அசுவினி—வெற்றி, ரோகிணி—ஜெயம், மிருகசீரிடம்—சுபம், சம்பத்து திருவாதிரை—எவ்வளவு வந்தபோதிலும் பற்றாக்குறை, புனர்பூசம்—புத்திரபாக்கியம், செல்வம் சேருதல், பூசம்—புத்திரவிருத்தி, சுபம், மகம்—உத்தமம், உத்திரம்—நாளுக்கு, நாள் சுகம் ஏற்படும். அஸ்தம்—புத்திரவிர்த்தி நிதான பலன் தரும் சித்திரை—குணம் நிதானமாக தீரும், சுவாதி—சுகம், அனுஷம்—கல்வி உயர்தல், சௌபாக்கியம், மூலம்—எஜமானருக்கு ஆரோக்கியம் குறைவு, உத்திராடம் - சுபம், திருவோணம்—சுபங்கள் நிதானமடையும், புத்திரசந்தோஷம், அவிட்டம்—வீடு கட்டின எஜமானர் சிலகாலம் சுகம் அனுபவித்து கைமாறி மற்றவர் அனுபவித்தல், சதயம்—இலட்சுமி வாசம் செய்தல், வெற்றி, சுபகரம், உத்திரட்டாதி - போக பாக்கியம், சந்தோஷம், ரேவதி—ஆரோக்கியம் குறைவுபட்டு நிதானமாக சுகம் தரும்.

வீடு கட்ட மண்:— வெள்ளை மண் வந்தால் பிராமணர்களுக்கு பலன் தரும். சிவந்த மண் அரசர்களுக்கு பலன் தரும். பசுமண் (அல்லது) களிப்பு மண் வைசியர்க்கு நல்லது. கருமண் மற்ற ஜாதியினருக்கு நல்லது.

வீடு கட்ட வேண்டிய மாதங்கள்:— சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இந்த 8 மாதம் உத்தமம். (வைகாசி, கார்த்திகை) மிகவும் உத்தமம் வாசற்கால் அமைக்கலாம்.

சுப சகுணங்கள்:— பசு, கன்னிகை, சுமங்கலி, புஷ்பம், தயிர்கூடை, தாசி, பழங்கள், மஞ்சள், குங்குமம், பால், மங்கள வாத்தியங்கள், எரியும் விளக்குகள், குதிரை, யானை எருது, இரட்டைப்பிராம்மணர்கள், குடை, மணியோசை, கழுதை கத்தல், வேதம் ஓதும் சத்தம்.

அப சகுணங்கள்:— எண்ணை கூடை வருதல், இரண்டு சூத்திரர்கள், துக்கமுள்ளவர்கள், அலங்கோலமாக முடியை அவிழ்த்துக் கொண்டு வருவது, பாம்பு, வெற்றுக்குடம், நிர்வாணமான நபர், ஜடாதாரி, ஈரவஸ்திரமணிந்தவர், குயவன், வைத்தியர், அரிவாள், கத்தி, கடப்பாறை, மண்வெட்டி, கோடாலி, புதுப்பானை, ஒற்றைப் பிராம்மணர், குருடன், விதவை, மொட்டை தலை, பண்டாரம், அழுதுக்கொண்டு இருப்பவர், விரட்டை, விறகு, காற்று மழை, தூறல், செல்லும் போது அழைப்பது.

பட்சி சகுணங்கள்:— பரத்துவாசம், கருடன், மான், டேகை, கோட்டான், கீரிப்பிள்ளை, அணிப்பிள்ளை, நாய், பூனை, மூஞ்சிறு, இவைகள் வலப்பக்கமிருந்து இடப்பக்கம் போனால் சுபம். காகம், நாராயண பட்சி, கள்ளிக்காக்கை, நரி, கிளி, குரங்கு, கொக்கு, குயில், மயில், மாடு, எருமை, ஜவ்வாது பூனை இவை இடப்பக்கமிருந்து வலப்பக்கம் போனால் சுபம்.

ராசிகள் விசேஷங்கள்:— விவாஹத்திற்கு ஜென்ம ராசி விசேஷமாகும். கிரஹாரம்பம், விவகாரம் துவக்குதல், தானம் செய்தல், மந்திரம் கற்றுக் கொள்ளல், இரண்டாம் விவாஹம் செய்தல்.

காலமான பின் சுபகாரியங்கள் செய்ய:— தாய், தந்தை, இறந்தால் 1 வருட காலம் வரை சுபகாரியங்களை தவிர்க்க வேண்டும். மனைவி இறந்தால் 3 மாதம் வரை செய்யக்கூடாது. சகோதரர் இறந்தால் 3 பக்ஷம் அதாவது 1½ மாதம் செய்யக்கூடாது. தாயாதிகள் இறந்தால் 1 மாதகாலம் செய்யக்கூடாது. இதன் மத்தியில் செய்யும்படி அவசரம் ஏற்பட்டால் விக்நங்களைப் போக்கும் விநாயகனைப் பூஜித்து அன்னதானம் செய்தபின் செய்வது நல்லது.

விவாஹத்திற்குப்பின் செய்யத்தகாதவை:— விவாஹமான 6 மாதத்திற்குள் அந்த கிரஹத்திற்கு சம்மந்தப்பட்டவர்களுக்கு உபநயனம், கர்ணபூஷணம், கிரஹப் பிரவேசம், தீர்த்தயாத்திரை இவைகளை விலக்குவது நல்லது.

கர்த்தரி என்றால் என்ன? விவாஹ லக்கனத்திற்கோ பிரவேச லக்கினத்திற்கோ இரண்டு பக்கங்களிலும் அதாவது 2-12ம் வீட்டில் பாபகிரஹமிருப்பது தான் கர்த்திரி தோஷமாகும்.

சித்திரை மீ 21 உ முதல் வைகாசி மீ 14உ வரையில் உள்ள காலம். அக்னிநக்ஷத்திர கர்த்தரிதோஷ காலமாகும்:— இந்த காலங்களில் விவாஹாதி சுபகாரியங்களைச் செய்ய யாதொருதடையுமில்லை. இக்காலம் கர்த்தரி அல்ல.

அக்னிநக்ஷத்திர காலங்களில் செய்யத்தகுந்தவை:— விவாஹம், உபநயனம், பிரவேசம், பும்ஸவனம், ருதுசாந்தி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்னிநக்ஷத்திர காலங்களில் செய்யத் தகாதவை:— கிணறு தோண்டல், விதைவிதைத்தல், குளம் வெட்டல், தோட்டம் வைப்பது, மரம் நடுதல் கூடாது.

ஜென்ம நக்ஷத்திரத்தில் செய்யத்தக்கவை:— வித்யாரம்பம், கொளம், அன்னப்பிராஸனம், யக்ஞம், உபநயனம், பட்டாபிஷேகம், நிலம் வாங்குதல் முதலானது சிறந்ததாகும்.

ஜென்ம நக்ஷத்திரத்தில் செய்யத்தகாதவை:— விவாஹம், கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், மருந்து சாப்பிடல் முதலானது கூடாது.

பெண்களுக்கு மட்டும் ஜென்ம நக்ஷத்திர பலன்:— பெண்களுக்கு மட்டும் விவாஹம், ஜென்ம நக்ஷத்திரம் வந்தால் செய்யலாம் என்பது விதி. ஜென்மவாரத்தில் செய்யக்கூடாது.

ஜென்ம நக்ஷத்திரம்:— ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் ஒரே நக்ஷத்திரமிருப்பின் அது சிறந்தது அல்ல. பரிஹாரம் புண்ணியஸ்தலம் சென்று வருதல்.

தோஷ மற்ற காலம்:— சூரிய உதயம் அதாவது உஷக்காலத்தில் திதிதோஷமும், அபிஜித் காலத்தில் அதாவது 12½ நாழிகைக்கு மேல் 1 நாழிகைக்குள் நக்ஷத்திர தோஷமும், அஸ்தமனக் காலத்தில் லக்ன தோஷமும், இரவில் வாரதோஷமும் கிடையாது.

கெண்டாந்திர தாரா நக்ஷத்திரங்கள்

அசுவனி : அசுவனியில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1-க்கு தகப்பனார்க்கு கெண்டம், புத்திரன் கெண்டம், பாதம் 2-க்கு தாய்க்குக்கெண்டம், பாதம் 3-க்கு தனநாசம், பாதம் 4-க்கு சுக சௌக்கியம்.

பரணி : இதில் பாதம் 1-2-3 பிறந்தவர்கள் ஆண் ஆனால் தகப்பனார்க்குக் கெண்டம், பெண் ஆனால் தாய்க்கு கெண்டம். பாதம் 4க்கு தோஷமில்லை.

ரோகிணி : ஆண், பெண் எந்த மாதத்தில் பிறந்தாலும் மாமன் (அம்மான்) கெண்டம். நெய், நல்லெண்ணை, விளக்கெண்ணை மண் சாணக்கையில் கூட்டி வெள்ளிக்கம்பி முறுக்கி குழந்தைக்கு தலைவழியாக போட்டு கால்வழியாக 3 முறை எடுத்து வெள்ளி கம்பியை முறுக்கி எண்ணையில் போட்டு தாய் குழந்தை உருவத்தை, எண்ணையில் அம்மான் பார்த்தால் சாந்தி. மாலை கோவிலில் திருச்சல் போட்டு விளக்கு ஏற்றி கோவில் சுத்த நல்லது.

பூசம் : இந்த நக்ஷத்திரத்தில் கடக் லக்கினத்தில் எந்த மாதத்தில் பிறந்தாலும் தகப்பனுக்கு கெண்டம்.

2-ம் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தகப்பனாருக்கு கெண்டம். பெண் ஆனால் தாய்க்கு கெண்டம்.

மகம் : இந்த நக்ஷத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1 ஆனால் தகப்பனாருக்கும், பாதம் 2 ஆனால் தாயாருக்கும், பாதம் 3 ஆனால் தன நாசமும், பாதம் 4 ஆனால் சுக சௌக்கியம் ஏற்படும்.

உத்திரம் : இந்த நக்ஷத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1-க்கு தகப்பனாருக்கும், 2-ம் பாதம் ஆண் ஆனால் தகப்பனாருக்குக் கெண்டம். பெண் ஆனால் தாயாருக்கு கெண்டம், 3, 4-ம் பாதம் ஆனால் தோஷமில்லை.

அஸ்தம் : இந்த நஷத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1, 2 தோஷமில்லை 3-ம் பாதம் ஆண் ஆனால் தகப்பனாருக்கு கெண்டம், பெண் ஆனால் தாயாருக்கு கெண்டம், 4-பாதம் ஆனால் தோஷமில்லை.

சித்திரை : இந்த நக்ஷத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1-2-3, ஆண் ஆனால் தகப்பனாருக்கு கெண்டம், பெண் ஆனால் தாயாருக்கு கெண்டம் 4-பாதம் ஆனால் தோஷமில்லை (பிதாவுக்கு நிம்மதி குறைவு).

பூராடம் : இந்த நக்ஷத்திரத்தில் எந்த பாதமாயினும் தனுர் லக்கினமென்றால் தகப்பனாருக்கு கெண்டம். ஆண், பெண் எதுவாயினும் தோஷமாகும். பாதம் 1-க்கு தகப்பனார் கெண்டம், பாதம் 2-க்கு தாயாருக்கு கெண்டம், பாதம் 3-க்கு மூத்தோர் கெண்டம் பாதம் 4-க்கு தாய் சகோதரருக்கு கெண்டம்.

உத்திரட்டாதி : இந்த நக்ஷத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1-க்கு ஆண் ஆனால் தாயாருக்கு கெண்டம். 2-3-4 பாதமானால் எவருக்கும் தோஷம் கிடையாது.

ரேவதி : இந்த நக்ஷத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1-2-3 ஆனால் தோஷமில்லை பாதம் 4-ஆனால் தாய், தந்தையார் உடன் பிறந்தவர்களுக்கு கெண்டம் சிலர் ஆண் ஆனால் தகப்பனாருக்கும் பெண் ஆனால் தாய்க்கும் கெண்டம் என்பார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆண், பெண் தோஷம் நக்ஷத்திரம்

ஆயில்யம் :— நக்ஷத்திரம் ஆண், பெண் ஜெனனமாயின் மாமியாருக்கு ஆகாது.
விசாகம் :— மைத்துனருக்கு ஆகாது.
கேட்டை :— ஜேஷ்ட புத்திரனுக்கு ஆகாது.
மூலம் :— மாமனாருக்கு ஆகாது.
ஜேஷ்ட நிவர்த்தி :— ஜேஷ்டகுமாரன், ஜேஷ்டகுமாரத்தி ஜேஷ்டமாதம் (ஆனி) இந்த மூன்றும் சேரக்கூடாது.

விருந்துண்ண நாள் (பலன்) :— திங்கள், புதன், வெள்ளி, சனி உத்தமம், வியாழன் வெறுப்பும், ஞாயிறு பகை கூடாது. (திதி) வளர்பிறை, (சுக்லபக்ஷம்) அஷ்டமி நவமி கூடாது. மற்ற திதிகள் உத்தமம் (நக்ஷத்திரம்) ரோகிணி.

மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, உத்தமம் (லக்கினம்) ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம், உத்தமம்,

கெட்ட நக்ஷத்திரங்களில் மரணம் சம்பவித்தால் விளக்கப்படும் மாதங்கள்

அவிட்டம் 6மீ கிருத்திகை 3மீ ரோகிணி 5மீ சதயம் 6மீ புனர்பூசம் 3மீ மகம் 5மீ பூரட்டாதி 6மீ உத்திரம் 3மீ, மிருகசிரிடம் 2மீ, உத்திரட்டாதி 6மீ, ரேவதி 6மீ, சித்திரை 2மீ, விசாகம் 3மீ, உத்திராடம் 3மீ இவை திரிபாத நக்ஷத்திரங்களாம்.

யோகினி விபரம் அறியவும்

திதி	சுக்கில பக்ஷம் ~~அமரம்~~	கிருஷ்ண பக்ஷம் ~~பூர்வம்~~	அஷ்டதிக்குகள் பெயர்கள்
பிரதமை	கிழக்கு	மேற்கு	பச்சாத்
துவிதியை	வடக்கு	வடமேற்கு	வாயுவு
திருதியை	தென்கிழக்கு	வடகிழக்கு	ஈசான்னியம்
சதுர்த்தி	தென்மேற்கு	ஆகாசம்	----------------
பஞ்சமி	தெற்கு	பூமி	----------------
ஷஷ்டி	மேற்கு	கிழக்கு	ப்ராக்
ஸப்தமி	வடமேற்கு	வடக்கு	உத்திரம்
அஷ்டமி	வடகிழக்கு	தென்கிழக்கு	அக்னி
நவமி	ஆகாசம்	தென்மேற்கு	நிருருதி
தசமி	பூமி	தெற்கு	தக்ஷிணம்
ஏகாதசி	கிழக்கு	மேற்கு	பச்சாத்
துவாதசி	வடக்கு	வடமேற்கு	வாயுவு
திரயோதசி	தென்கிழக்கு	வடகிழக்கு	ஈசான்னியம்
சதுர்த்தசி	தென்மேற்கு	ஆகாசம்	----------------
பௌர்ணமி ○	தெற்கு	அமாவா.. பூமி ●	----------------

குறிப்பு:- கிழக்கு-முதல் வடகிழக்கு வரையில் அஷ்டதிக்குள் வரையிலுள்ள திக்பாலகர்கள் முறையே இந்திரன், அக்னி, யமன், நிருருதி-வருணன்—-வாயு குபேரன்-ஈசானன் ஆவர்.

வாரசூலை, சூலை பரிகாரம்

வாரம்	வாரசூலை	நாழிகை	சூலை பரிகாரம்
ஞாயிறு	மேற்கு—வடமேற்கு	12	வெல்லம்
திங்கள்	கிழக்கு—தென்மேற்கு	8	தயிர்
செவ்வாய்	வடக்கு—வடமேற்கு	12	பால்
புதன்	வடக்கு—வடகிழக்கு	16	பால்
வியாழன்	தெற்கு—தென்கிழக்கு	20	தைலம்
வெள்ளி	மேற்கு—தென்மேற்கு	12	வெல்லம்
சனி	கிழக்கு—தென்கிழக்கு	9	தயிர்

மேற்குறித்த நாழிகை வரையும் சூலதோஷமாம். அவசியமாய்ப் பிரயாணம் செய்ய வேண்டுமானால் மேற்கண்ட நாழிகை மேல் அதனருகில் கொடுத்திருக்கும் சூலபரிகாரம் வஸ்து (அல்லது) ஆகாரம் உட்கொண்ட பின் பிராயணம் செய்யலாம்.

குறிப்பு:- *1 நாழிகை என்பது (0.24) நிமிஷம், ஜாமம் 1-க்கு 6-நாழிகை (2 மணி 24-நிமிஷம்) காலை மணி 6 முதல் மாலை மணி 6 வரை 5 ஜாமம் 30-நாழிகை (மாலை மணி 6) 10-ஜாமம் 60-0 நாழிகை 1-நாள் பகல் இரவு என்று அறியவும்.*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

21 சுபகாரியங்கள் நடத்த வேண்டியதற்கு முக்கியமான அம்சங்கள்

விபரம்	நட்சத்திரம்	திதி	லக்கினம்	விசேஷ விதி
1. உப நயனம்	அசு, ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, உத்தி, திருவோ, உத்ட்,ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, துவா, திர	ரிஷ, மிது, கட, கன், துலா, தனு, மீன	8-ம் இடம் சுத்தம், உத்தராயணத்தில் செய்தல் (1)
2. மாங்கல்யம் செய்தல்	அசு, ரோகி, மிரு, புன, பூச, மக, உத், அஸ், சுவா, அனு, திரு, அவி, சத, உத்ரட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, துவா, திர	ரிஷ, மிது, கட, கன், துலா, தனு, மீன	2-ம் இடம் சுத்தம்
3. விவாஹம்	அசு, புன, பூச, சித், அவி, சத, ரோகி, மிரு, மக, உத், அஸ், சுவா, அனு, மூல, உத்ரா, திரு, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா, துவா, திர	ரிஷ, மிது. கட, கன், துலா, தனு, கும்	8,6,11-ல் பாவர் நன்று. 8-ல் குருபொல்லார். 6,8-ல் புதன் சுக்கிரன் கெடுதி 2,3-ல் சந்திரன் நன்று. 7-ல் எவரும் தியர்
4. நிஷேகம் (or) சாந்தி முகூர்த்தம்	அசு, மிரு, புன, பூச, சித், அவி, ரோகி, உத், அஸ், சுவா, அனு, உத்திர, திருவோ, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா, துவா, திர	1, மேஷ, . கட, , துலா,மக, 2 சுப திருஷ்டியுள்ள மற்ற ராசி நன்று	1,7,8-ல் இடம் சுத்தம், ஜென்ம நட்சத்திரம் ஆகாது.
5. புஷ்ப தாரணம்	அசு, ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, மூல, உத்தி, திரு, அவி, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா, துவா, திர	மேஷ, ரிஷ, துலா, தனு, மக, கும், மீன	3-ம் பாதத்தில் செய்தல், 8ம் இடம், சுத்தம்
6. சீமந்தம் (or) வளைகாப்பு	ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், உத்தி, திரு, உத்ட், ரேவ	திருதி, பஞ்,-சப், ஏகா, திரயோ	மேஷ, ரிஷ,மிது, கட, கன், துலா, கட,மக, கும், மீன	8-9ம் இடம் சுத்தம்
7.தொட்டிலில் குழந்தையை விடுதல்	ரோகி, திரு, பூச, உத்தி, உத்ரா, அவி, சத, உத்ட்	துதி, திரு, பஞ், சப், தச, ஏகா, துவா, திர	சுபர் பார்த்த லக்கினம்	8-ம் இடம் சுத்தம்
8. கர்ண பூர்ணம் (or) காது குத்த	மிரு, திரு, புன, பூச, உத், அஸ், சித், உத்ரா, திரு, அவி, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, துவா, திர	1. ரிஷ, கட, கன், துலா, தனு, மீன, 2,மேஷ, மக	8-ம் இடம் சுத்தம், பகலில் இரண்டு திதி, நட்சத்திரங்கள் சேரும் தினம் கூடாது.
9. வித்யாரம்பம்	அசு, ரோகி, திரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, திரு, அவி, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா	மேஷ, மிது, கன், துலா, தனு, மக, மீன	5-வது வயதில் நடத்தல் 4, 8-ம் இடம் சுத்தம்
10. கிருஷியாரம்பம், உழவு செய்ய	ரோகி, புன, பூச, உத், அஸ், மூல, உத்ரா, உத்ட், ரேவ	திரு, பஞ், சப், ஏகா, திர	ரிஷ, மிது, கட, மக, மீன	ஆகாச பாதாள யோகினி கூடாது
11. வாகன வாங்க	அசு, ரோகி, மிரு, புன, மக, உத், அஸ், சித், சுவா, அனு, உத்தி, திரு, உத்ட், ரேவ	சப், ஏகா, பௌ	மிது, கட, சிம, கன், விரு, தனு, மீன	சூரிய உதயத்தில் ஏறல் நன்று
12. தானியம் களஞ்சியத்தில் வைக்க	பர, மிரு, ரோகி, திரு, மக, உத், அஸ், அனு, உத்ரா, திரு, உத்ட்	துதி, திரு, பஞ், சப், தச, ஏகா, துவா, திர,பௌ	ரிஷ, மிது, சிம், கன், விரு, தனு, கும், மீன	சனிக்கிழமை நன்று, கர்ப்பிணியாவது கன்னிகையாவது வைத்தல் நலம்
13. விதை விதைக்க	ரோகி, பூச, மக, உத், அஸ், சுவா, அனு, மூல, உத்ரா, திரு, சத, உத்ட், ரேவ, அசு, மிரு, புன, அவி	திரு, பஞ், சப், ஏகா, திர, பௌ, துதி, சஷ், தச	ரிஷ, கட, சிம், மீன, மிது, துலா	8-ம் இடம் சுத்தம் ஆகாச பாதாள யோகினி கூடாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

21 சுபகாரியங்கள் நடத்த வேண்டியதற்கு முக்கியமான அம்சங்கள் (தொடர்ச்சி)

விபரம்	நட்சத்திரம்	திதி	லக்கினம்	விசேஷ விதி
14. பூமி முதலானவை வாங்க	அசு, கார், ரோகி, மிரு, புன, பூச, மக, பூர, விசா, அனு, மூல, பூரா, திரு, அவி, பூரட், ரேவ	துதி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா, துவா, திர	சிம், தனு, மக	8-ம் இடம் சுத்தம், மாடு கொடுத்தலுக்கு, புதன் கிழமை, வெள்ளிக் கிழமை ஆகாது
15. பொன் நகை அணிய	அசு, ரோகி, மிரு, பூச, அஸ், சித், அனு, ரேவ	பஞ், சஷ், தச, ஏகா, பௌ	ரிஷ, மிது, கன், தச, மீன	சனிக்கிழமை நன்று
16. கோடி துணி உடுத்தல்	அசு, ரோகி, புன, பூச, உத், அஸ், சித், சுவா, விசா, அனு, உத்ரா, அவி, உத்ட், ரேவ	துதி, திரு, சப், தச, ஏகா, துவா, திர, பௌ	ரிஷ, மிது, கன், விரு, தனு, கும், மீன	8-ம் இடம் சுத்தம்
17. கிரகாரம்பம் செய்தல் (or) கடகால் எடுத்தல்	ரோகி, மிரு, புன, பூச, மக, உத், சுவா, அனு, உத்தி, திரு, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சப், தச, ஏகா, துவா, திர	ரிஷ, மிது, விரு, கும்	8, 12-ம் இடம் சுத்தம்
18. கிரகப் பிரவேசம்	ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், அனு, உத்தி, திரு, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சப், தச, ஏகா, திர	ரிஷ, மிது, சிம், கன், துலா, தனு, கும், மீன	குரு, சுக்கிர அஸ்த மனமும்,வெள்ளி எதிரிலும் கூடாது. 8, 12-மிடம் சுத்தம்.
19. மருந்து சாப்பிட	அசு, ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, உத்தி, திரு, அவி, சத, உத்ட், ரேவ	துதி, திரு, பஞ், சப், ஏகா, துவா, திர	மேஷ, கட, துலா, மக	ஞாயிறு நன்று 8-ம் இடம் சுத்தம்.
20. யாத்திரை, பிரயாணம் செய்ய	அசு, ரோகி, மிரு, புன, பூச, உத், அஸ், அனு, மூல, உத்ரா, திரு, அவி, சத, உத்ட், ரேவ	துதி, திர, பஞ், சப், தச, ஏகா, துவா, திர	மேஷ, மீன, கட, கன், துலா, தனு, மக, மீன	சூலம் யோகினி கூடாது. புதன், வியாழன், வெள்ளி நன்று (3)
21. தொழில் உத்தியோகம் பார்த்தல்	அசு, பூச, உத, அஸ், சுவா, மூல, திரு, சத, உத்ட்	பஞ், சப், தச, ஏகா, திர.	மே, மி, சி, த, து, ம, மீ.	ஜென்மவாரம் கூடாது 4,10-மிடம் சுத்தம்

1) ஸாம வேதிகள் செவ்வாயும் ருக் வேதிகள் குருவும் யஜுர் வேதிகள் சுக்கிரனும், அஸ்தமும் நீசமுமாக இருக்கும்போது செய்யக்கூடாது.

2) நெல்-ஞாயிற்றுக்கிழமை உதயம். எள்-சனி உச்சி. கொள்ளு, வரகு, செவ்வாய் உதயம். கரும்பு நட அசுவினி, வெற்றிலைநட, ஆயிலியம், மூலம். எள்-அனுஷம், சதயம், மரம்-ரோகிணி. கத்தரி முதலானவை நட-பரணி, பயறு-சித்திரை.

3) சூலையுள்ள திசையில் போகக்கூடாது. அவசியம் போக வேண்டியதானால் வார சூலை காலத்தில் 10-நாழிகைக்குமேல் செல்லலாம். யோகினி பின்னும் வலமும் நன்று. முன்னும் இடமும் தீது.

ஸ்ரீராமர் சக்கரம்

9	16	5	4
7	2	11	14
12	13	8	1
6	3	10	15

1—ஸ்தான நாசம்
2—துக்கம்
3—காரியசித்தி
4—லாபம்
5—மரணம்
6—குலக்ஷயம்
7—ராஜபலம்
8—பந்து தரிசனம்
9—கல்யாணம்
10—நாசம்
11—சர்வலாப
12—தீர்க்காயுசு
13—கலகம்
14—சுகம்
15—நன்மை
16—சேமம்

சீதா சக்கரம்

1	7	8
3	2	6
5	9	4

1—தனம்
2—நாசம்
3—சிநேகம்
4—பீடை
5—சேக்ஷமம்
6—கலகம்
7—லாபம்
8—மரணம்
9—சந்தோ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நட்சத்திரங்களில் செய்யும் சுப காரியங்களின் விபரம்

1. அசுவனி : பூ முடித்தல், கர்ப்பாதானம், விவாகம், அன்னப்பிராசனம், பெயர்சூட்டல், உபநயனம், வாகனம் வாங்க, வேதசாஸ்திராப்பியாசம், புதிய ஆடையாபரணம் வாங்குதல். அரசு பதவி ஏற்க, கிரகாரம்பம், பொன்னேர் கட்டல், விதை விதைத்தல், தென்னை, பலா, மா முதலிய விருஷங்கள் வைத்தல், யாத்திரை போக, கிரகபிரவேசம், பசுத்தொழுவம் கட்ட.

2. பரணி : தீர்த்த யாத்திரையில் திதி முதலானவை நடத்தல், முட்செடிகள் நட, கத்திரிக்காய் விதைவிதைக்க.

3. கிருத்திகை : செடிகள் வெட்ட, கடன் நீக்க, வாகனம் விற்க, குழந்தைகளுக்கு முடி எடுத்தல்.

4. ரோகிணி : ருதுசாந்தி பூமுடித்தல், சீமந்தம், பெயர் வைத்தல், உபநயனம், கல்வி கற்றல், கிரகப்பிரவேசம், கும்பாபிஷேகம், நவக்கிரக சாந்தி, வியாபாரம், தானியங்கள் இருப்பு வைக்க, கிணறு வெட்ட, வாசல்கால் நட, பத்திரிக்கை வெளியிட, விருந்துண்ண, ஆலயம் ஆரம்பம்.

5. மிருகசிரிஷம் : விவாகம், ருதுசாந்தி, பூமுடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடிவாங்க, காதுகுத்த, அன்னம் ஊட்டுதல், உபநயனம், கல்வி ஆரம்பித்தல், ஆபரணம் அணிதல், மனை அமைத்தல், கிராமப் பிரவேசம், தேவதாபிரதிஷ்டை, கிரகப்பிரவேசம்.

6. திருவாதிரை : சூளைக்கு நெருப்பு இட, சிவ பூஜை செய்ய, ஆயுதம் கலை கற்றல்.

7. புனர்பூசம் : பூமுடித்தல், சீமந்தம், பெயர்சூட்டல், முடிவாங்க, விருந்து சாப்பிட, காதுகுத்த, உபநயனம், கல்வி கற்றல், பதவியேற்றல், வாஸ்து சாந்தி, கிரகப்பிரவேசம், யாத்திரை, வியாபாரம், புதுத்துணி வாங்க, திருமணம், கும்பாபிஷேகம்.

8. பூசம் : ருதுசாந்தி, பூமுடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடிவாங்க, சாஸ்திரம் கலை கற்க, பசு வாங்க, விவசாயம், யாத்திரை, ஆலோசனை சபை கூட, பதவிப் பிரமாணம் ஏற்க, வாஸ்துசாந்தி, கரும்புநட, விவாகம் நடத்த, குடிபோக, இரத்தின நகைகளை அணிய.

9. ஆயிலியம் : ஜெபம் பூர்த்தி செய்ய, நவக்கிரகசாந்தி செய்ய, ஆயுதம் வாங்க.

10. மகம் : விவாகம், மந்திரம் கற்க, சந்நியாசி, தவசிகளை தரிசனம் செய்ய.

11. பூரம் : ஆயுதப் பிரயோகம் செய்ய, கிரகப்பார்வை நிவர்த்தி செய்ய, அம்பாள் தரிசனம் செய்ய.

12. உத்திரம் : கெர்ப்பாதானம், பூமுடித்தல், சீமந்தம், பெயர்சூட்டல், அன்னம் ஊட்டுதல், உபநயனம், விவாகம், காதுகுத்த, வித்தை கற்க, வேத மந்திரம் கற்க, ஆபரணம் அணிய, கிரகப்பிரவேசம், விதை விதைக்க, தேவதாபிரதிஷ்டை.

13. அஸ்தம் : ருதுசாந்தி, பூமுடித்தல், சீமந்தம், பெயர்சூட்டல், முடிவாங்க, விருந்து சாப்பிட, உபநயனம், விவாகம், சாஸ்திரம் செய்ய, விதைவிதைக்க, கும்பாபிஷேகம் செய்ய, கிணறு வெட்ட, நந்தவனம் வைக்க, அரசு அதிகாரி பார்க்க, கிரகப்பிரவேசம்.

14. சித்திரை : கெர்ப்பாதானம், பூமுடித்தல், பெயர் சூட்டல், முடிவாங்க, கல்வி ஆரம்பிக்க, உபநயனம், விவாகம், வாகனம் வாங்க, அபிஷேகம் செய்ய, தேவதாபிரதிஷ்டை செய்ய, கிரகப்பிரவேசம், நிச்சயதார்த்தம், கிணறு வெட்ட அரசு அதிகாரியை பார்க்க, பதவிப் பிரமாணம்.

15. சுவாதி : கெர்ப்பாதானம், பூமுடித்தல், பெயர்சூட்டல், முடிவாங்க, அன்னம் ஊட்ட, ஜோதிடம் கற்க, மருந்து சாப்பிட, புத்தகம், பத்திரிக்கை வெளியிட, நவக்கிரகம் ஜெபம், விவகார துவக்கம், கர்ம வியாதிகளுக்கு மருந்து சாப்பிட.

16. விசாகம் : விவசாய, தானியங்கள் அறுக்க, கிணறுகளை சீர்செய்ய.

17. அனுஷம் : ருதுசாந்தி, பூமுடித்தல், பெயர் சூட்ட, காதுகுத்த, உபநயனம், ஆபரணம் வாங்க, பதவிப்பிரமாணம், வாகனமேற, கிரகப்பிரவேசம், வாசக்கால் செய்ய, தூண்நாட்ட, தேவதாபிரதிஷ்டை.

18. கேட்டை : நகைகளை அழிக்க, ஆயுத வேலைகள் ஆரம்பிக்க, மந்திரம் செய்ய, ஆட்களை நீக்க, கடன் நீக்க, ரத்தினகற்களை நன்கு அலச, வாஸ்து சாந்தி செய்ய.

19. மூலம் : ருதுசாந்தி, பூமுடித்தல், சீமந்தம், விருந்து உண்ண, வில்வித்தை கற்க, ஆபரணம் அணிய, விவகாரம் பெயர் சூட்டல், உபநயனம், காது குத்த.

20. பூராடம் : கணக்கு பயில, கரும்பு நட, பழைய கிணறு சீர்செய்ய, புனித ஸ்நானம் செய்ய, புனித திதி செய்ய, பிரயாணம் சென்று வர.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

21. உத்திராடம் : கெர்ப்பாதானம், பூமுடித்தல், சீமந்தம், பெயர் சூட்ட, காதுகுத்த, கிராமகிரகங்களில் சங்குஸ்தாபனம் செய்ய, தேவதாபிரதிஷ்டை, விவாகம், கிரகப்பிரவேசம்.

22. சிரவணம் : ருதுசாந்தி, பூமுடித்தல், விஷ்ணுபலி, நாமகரணம், அன்னம் ஊட்ட, காதுகுத்த, உபநயனம், விஷ்ணு கும்பாபிஷேகம், வீடு மனை ஆரம்பம் செய்ய, பந்தல் அமைக்க, ஓமசாந்தி, பொன்னேர் கட்ட, விதை விதைக்க, விவாகம் நடத்த.

23. அவிட்டம் : பூமுடித்தல், பெயர் சூட்டல், கல்வி கற்க, இயல் இசை, வித்தையை கற்க.

24. சதயம் : கெர்ப்பரதானம், பூமுடித்தல், பெயர் சூட்டல், முடிவாங்க, அன்னம் ஊட்ட, உபநயனம், வில் வித்தை கற்க, வாகனம் வாங்க, தேவதா பிரதிஷ்டை, வியாபார கணக்கு முடிக்க, பூமி வாங்க, வீடுவாங்க, தொட்டிலில் குழந்தை வைக்க, புனித யாத்திரை போக.

25. பூரட்டாதி : பம்பு செட் அமைக்க, மந்திரம் ஜெபிக்க, விவகாரம் முடிக்க.

26. உத்திரட்டாதி : ருதுசாந்தி, பூமுடித்தல், சீமந்தம், பெயர்சூட்டல், மரம் செடி, கொடி வைக்க, கோபுர ஆலய கிரகாரம்பம், கிணறு புதுப்பிக்க, விவாகம், குருகுலத்தில் கல்விபயில.

27. ரேவதி : ருதுசாந்தி, பூமுடித்தல், பெயர் சூட்டல், முடிவாங்க, காதுகுத்த, அன்னம் ஊட்ட, உபநயனம், விவாகம், வேதம் கற்க, புத்தாடை அணிதல், அணிகலன்களை அணிய, விதை விதைக்க, வெளியூர் புறப்பட, கும்பாபிஷேகம் செய்ய, கடல் கடந்து செல்ல.

நாம நக்ஷத்திர கணங்கள்

நக்ஷத்திர எழுத்துக்கள்	நக்ஷத்திரம்	மிருகம்	பக்ஷி	மரம்	கணம்
சு-சே-சோ-ல	அசுவினி	ஆண் குதிரை	இராஜாளி	* எட்டி	தேவ
லி-லு-லே-லோ	பரணி	ஆண் யானை	காக்கை	* நெல்லி	மனுஷ
அ-இ-உ-ஏ	கிருத்திகை	பெண் ஆடு	மயில்	அத்தி	ராக்ஷஸ
ஒ-வ-வி-வு	ரோகிணி	ஆண் நாகம்	ஆந்தை	நாவல்	மனுஷ
வே-வோ-கா-கி	மிருகசிரிஷம்	பெண் சாரை	கோழி	* கருங்காலி	தேவ
கு-க-ங-ச	திருவாதிரை	ஆண் நாய்	சிட்டுக்குருவி	*செங்காரு	மனுஷ
கே-கோ-ஹா-ஹீ	புனர்பூசம்	பெண் பூனை	அன்னம்	* மூங்கில்	தேவ
ஹு-ஹே-ஹோ	பூசம்	ஆண் ஆடு	நீர்க்காக்கை	அரசு	தேவ
டி-டு-டெ-டோ-டா	ஆயிலியம்	ஆண் பூனை	சிச்சிலி	புன்னை	ராக்ஷஷ
ம-மி-மு-மே	மகம்	ஆண் எலி	ஆண் கழுகு	ஆல்	ராக்ஷஷ
மோ-டா-டி-டு	பூரம்	பெண் எலி	பெண் கழுகு	பலாசு	மனுஷ
டே-டோ-பா-பி	உத்திரம்	எருது	கிளுவை	அலரி	மனுஷ
பூ-ஷ-ண-டா	அஸ்தம்	பெண் எருமை	பருந்து	வேலம்	தேவ
பே-போ-ரா-ரி	சித்திரை	ஆண் புலி	மரங்குத்தி	* வில்வம்	ராக்ஷஸ
ரு-ரே-ரோ-தா	சுவாதி	ஆண் எருமை	தேனீ	* மருதம்	தேவ
தி-து-தே-தோ	விசாகம்	பெண் புலி	பச்சைக்கிளி	* விளா	ராக்ஷஸ்
ந-நி-நு-நே	அனுஷம்	பெண் மான்	வானம்பாடி	* மகிழ்	தேவ
நோ-யா-யீ-யு	கேட்டை	கலை மான்	சக்கரவாகம்	பிராய்	ராக்ஷஸ
யே-யோ-பா-பி	மூலம்	பெண் நாய்	செம்போத்து	மாமர	ராக்ஷஸ
பூ-தா-பா-டா	பூராடம்	ஆண் குரங்கு	கவுதாரி	வஞ்சி	மனுஷ
பே-போ-ஜ-ஜி	உத்திராடம்	மலட்டுப் பசு	வலியன்	பலா, சு	மனுஷ
ஜு-ஜே-ஜோ-கா	சிரவணம்	பெண் குரங்கு	நாரை	எருக்கு	தேவ
க-கி-கு-கே	அவிட்டம்	பெண் சிங்கம்	வண்டு	* வன்னி	ராக்ஷஸ
கோ-ஸ-ஸீ-ஸு	சதயம்	பெண் குதிரை	அண்டங்காக்	- கடம்பு	ராக்ஷஸ
ஸ-ஸோ-தா-தி	பூரட்டாதி	ஆண் சிங்கம்	உள்ளான்	தேமா	மனுஷ
து-ச்ச-ஞா-த	உத்ரட்டாதி	பாற் பசு	கோட்டான்	* வேப்பை	மனுஷ
தே-தோ-ச-சி	ரேவதி	பெண் யானை	வல்லூறு	இலுப்பை	தேவ

* இக் குறியுள்ளவைகளெல்லாம் பாலில்லாத மரங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1998-99 ஸ்ரீ வெகுதான்ய வருஷ முக்கிய பலன்கள் சனிப்பெயர்ச்சி, இராகு-கேது, குரு பெயர்ச்சி பலன்கள்

மேஷ ராசி (அசுவனி, பரணி, கார்த்திகை 1ம்பாதம்)

இந்த வெகுதான்ய வருடத்தில் வைகாசி மீ 12உ குருபகவான் மீன ராசியில் பிரவேசித்து பின் வக்கிரமாகி ஆவணி மாதம் கும்பராசியில் மீண்டும் வருகிறார். அதே போன்று ஸ்ரீசனிபகவான் ஆனி 9ந்தேதி மேஷ ராசியில் பிரவேசிக்கிறார். இந்த ஆண்டு மார்கழி மாதம் 6ந்தேதி ராகு கேதுக்கள் பெயர்ச்சியாகி மகர ராசியிலும் கடக ராசியிலும் அமர்கிறார்கள். ஆகையால் மேஷ ராசிக்காரர்களுக்கு 7½ சனிகாலத்தில் ஜென்ம சனியாக வருவதால் இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு இந்த வருடம் மிகவும் சுமாரான பலன்களைக் கொடுக்கும் வாய்ப்புண்டு அரசு அதிகாரிகளுக்கு இந்த வருடம் இடமாற்றம் கண்டிப்பாக உண்டு. கணவன் மனைவி உறவு மிக நன்றாக இருக்கும். சில பொருள் சேர்க்கை உண்டு. இந்த ராசிக்காரர்களுக்கு ஆண்டின் பிற்பகுதியில் தொழிலில் இடமாற்றம், தொழில் மாற்றம், வீடு மாற்றம் கண்டிப்பாக உண்டு. கலைத்துறையில் உள்ளவர்கள் புதிய சாதனைகள் படைப்பார்கள். மருத்துவ சம்பந்தப்பட்ட துறையில் உள்ளவர்கள் இதுவரையில் கண்டுபிடிக்க முடியாமல் இருந்த உயிர் காக்கும் மருந்துகளை கண்டுபிடித்து விருது, பாராட்டுகள் பெறுவார்கள். இரும்பு சம்பந்தப்பட்ட விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு தொழில் இந்த வருடம் மிகவும் மந்தமாக இருக்கும். தொழில் கல்வி படிக்கும் மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சி பெறுவார்கள். மற்ற துறையில் படிக்கும் மாணவர்கள் மிகவும் கவனமாக படிக்கவும். வியாபாரிகள் நல்ல மழையினால் அதிக பலன் பெற வாய்ப்புண்டு. இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு பெண் குழந்தை பிறக்கும் வாய்ப்பு உண்டு. பொதுவாக இந்த ஆண்டு வருமானமும் அதிகம் ஏற்பட்டு, செலவுகளும் அதிகம். இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டாவது சுற்றாக 7½ சனி வந்தால் பொங்கு சனியாகும். இக்கால கட்டத்தில் ஆடை, ஆபரணங்கள் சேர்க்கையும், ஆடம்பரமான வீடுகள் கட்டுதலும் நடக்கும். கார்த்திகை, மார்கழி மாதம் மட்டும் இந்த ராசியை சேர்ந்தவர்கள் வாகனப் போக்குவரத்துகளிலும், இரும்பு எந்திரங்களை கையாளுவதிலும் கவனத்துடன் இருக்க வேண்டும். விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. புதிய தொழில் முயற்சிகள் ஆண்டின் பிற்பகுதியில் செய்தால் வெற்றி உண்டு. நகை வியாபாரிகள் அளவான லாபம் பெறுவார்கள்.

ரிஷப ராசி (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிசம் 1, 2ம் பாதம்)

இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு குருப்பெயர்ச்சியினால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது. சனிப்பெயர்ச்சியும் ஒரு வகையில் லாபகரமாகவே இருக்கும். கடந்த ஆண்டு குரு 9ல் இருந்து செய்யாத யோகத்தை இந்த ஆண்டு குரு 10ல் கும்பத்தில் கேதுவுடன் சேர்ந்து ஆண்டின் முற்பகுதியில் பிரபல யோகத்தை செய்வார். புதிய தொழில் ஆரம்பித்தலும், இடமாற்றலும் ஏற்படும். மாணவர்கள் சிறப்பாக படிப்பார்கள். குறிப்பாக இந்தியாவில் எலெக்ட்ரானிக்ஸ் துறையில் உள்ள மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடித்து உலகப் புகழ் பெறுவார்கள். அரசியல்வாதிகள் வெற்றி அடைந்து புகழ் பெறுவார்கள். விவசாயிகள் நல்ல மகசூலை பெற்று லாபமடைவார்கள். கலைத்துறையில் உள்ளோர் தங்கள் துறையில் புதிய பாணியில் படைப்புகள் படைத்து விருது, பாராட்டுகள் பெறுவார்கள். கணவன் மனைவி உறவுகள் இனிமையாக இருக்கும். புதிய பொருள், நகை சேர்க்கைகளும் சொத்து சேர்க்கைகளும் ஏற்படும். மருத்துவ துறையில் உள்ளவர்கள் இந்த வருடத்தில் "எய்ட்ஸ்" நோயைக் குணப்படுத்துவதற்கு மிகச் சரியான மருந்துகளை கண்டுபிடித்து உலகப் புகழ் பெறுவார்கள். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகள் அதிகம் நடத்தி புகழ் பெறுவார்கள். இரும்பு வியாபாரம் சம்பந்தப்பட்ட துறையில் உள்ளவர்கள் அளவோடு லாபம் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு தெய்வத் திருப்பணிகளில் ஈடுபடுவார்கள். பூர்வீக சொத்துக்களில் சிலருக்கு பிரச்சினைகள் கார்த்திகை மார்கழி மாதங்களில் உருவாகும், கவனம் தேவை. நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்களுக்கு இந்த ஆண்டில் சிறப்பாக திருமணம் ஆகும் யோகம் உண்டு. இந்த ஆண்டின் பிற்பகுதியில் பெற்றோர்கள் உடல் நலனில் கவனம் தேவை. இந்த ராசியைச் சேர்ந்த தங்கம், வெள்ளி, நகை வியாபாரிகள் நல்ல லாபம் அடைவார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

மிதுனம் ராசி (மிருக சீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம், 1,2,3ம் பாதம்)

இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஆண்டு மிகமிக நல்ல பலனை செய்யும் ஆண்டாக அமைந்து உள்ளது. இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் உன்னதமான வெற்றியை பெறுவார்கள். புகழ் பெறக்கூடிய காலம். இந்த ராசியைச் சேர்ந்த மாணவர்கள் நன்கு படித்து புகழ் பெறுவார்கள். இரசாயன சம்பந்தப்பட்ட துறையில், இந்த ராசி மாணவர்கள் நன்கு படிப்பார்கள். விவசாயிகள் அமோக மகசூலைப் பெறுவார்கள். இரும்பு வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த திருமணமாகாத ஆண், பெண் இரு பாலருக்கும் இந்த ஆண்டு திருமணம் நடைபெறும். கணவன் மனைவி உறவு இனிமையாக இருக்கும். இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்கு தங்கம், வைரம் நகைகள், சிறப்பான முறையில் சேரும் யோகம் உண்டு. வீட்டிற்கு தேவையான ஆடம்பர பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. அரசு அதிகாரிகள் பதவி உயர்வு பெறுதலும், மேலதிகாரிகளின் பாராட்டு பெறுதலும் நடக்கும். மருத்துவ துறையில் உள்ளவர்கள் தங்கள் துறையில் பாராட்டுக்கள் பெற்று புகழ் அடைவார்கள். கலைத்துறையில் உள்ளவர்கள் வெளிநாடுகளில் நாட்டிய, சங்கீத நிகழ்ச்சிகள் நடத்தி புகழ் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த சினிமாத்துறையினர் புதுவிதமான படைப்புகள் படைத்து, புகழும், லாபமும் அடைவார். இந்த ராசியைச் சேர்ந்த தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவார்கள், வாகன ஓட்டுனர்கள், வாகன தொழில் நடத்துபவர்கள் கார்த்திகை, மார்கழி மாதங்களில் தங்கள் வாகனங்களை கவனமுடன் ஓட்ட வேண்டும். விபத்துக்கள் நடக்கும் காலமிது. கரும்பு விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். ஆண்டின் முற்பகுதியில் புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தெய்வத் திருப்பணிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு ஆண் குழந்தை புத்திர பாக்கியம் கிடைக்கும் யோகம் உண்டு. ஆண்டின் பிற்பகுதியில் சேமிப்புகள் அதிகம் இருக்கும்.

கடக ராசி (புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்)

இந்த ராசிக்கு குருபகவான் ராசிக்கு 8ம் இடத்தில் சஞ்சரிப்பதால் இந்த ராசிக்காரர்களுக்கு பொருளாதாரத்தில் தட்டுப்பாடு அதிகம் இருக்கும். திருமண காரியங்கள் ஆவணி மாதத்திற்குள் நடைபெற வாய்ப்புண்டு. இந்த ராசியைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் படிப்புகளில் மிகுந்த கவனத்துடன் படிக்க வேண்டும். கல்வியில் கவனம் சிதற வாய்ப்புண்டு. இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் புகழ் மங்க வாய்ப்புண்டு அரசியலில் ஒதுங்கி இருக்க வேண்டும். அஷ்டமத்து குருவாக இருப்பதால் தன்னுடைய கீர்த்தி, புகழ் மங்கும். பெண்கள் விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவில் பிரச்சினைகள் உருவாகும். பொறுமையாக இருக்கவும். பல குடும்பங்களில் தனிக்குடித்தனம் போகும் வாய்ப்புண்டு. சினிமா, சங்கித, நாட்டிய கலைஞர்களுக்கு இது ஒரு பாதிப்பான ஆண்டாகும். தொழில் கல்வி, என்ஜினியரிங் மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சி பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மகசூல் நன்கு இருந்தாலும் குடும்பச் செலவுகள் அதிகமாக இருப்பதால் பணம் மிஞ்சாது. உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவ செலவுகள் அதிகமாக இருக்கும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெற்றோர்கள் சகோதரர்களுடன் கருத்து வேறுபாடும், அவர்களது உடல் நிலையிலும் கவனம் தேவை. பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் உறுவாகலாம். நகை, இரும்பு வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தரும். புதிய பொருள், நகை வாங்குவதற்கு முடியாத காலம் இது. ஆண்டின் பிற்பகுதியில் கஷ்டங்கள் குறைந்து நிம்மதி ஏற்படும்.

சிம்மம் ராசி (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

இந்த ராசி நேயர்களுக்கு குருபகவான் சப்தமத்தில் மாறுவதும், அஷ்டமத்து சனி விலகுதலும் மிகவும் நல்லது. கடந்த ஆண்டில் பட்ட துன்பங்கள், அவமானங்கள், இழப்புகள் இவை அனைத்தும் இந்த ஆண்டில் நீங்கி, சுபிட்சங்கள், சந்தோஷம், எடுத்த காரியத்தில் வெற்றி ஏற்படும். இந்த ஆண்டு மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். அரசியல்வாதிகள் இழந்த புகழை மீண்டும் பெறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. தீவிர அரசியலில் ஈடுபட இது தகுந்த காலம். விவசாயிகள் நல்ல லாபம் பெறுவார்கள், கரும்பு, புகையிலை, சாகுபடி செய்வது நல்ல லாபம் தரும். உடல் ஆரோக்கியம் நலம் பெறும். மனம் தெளிவாக இருக்கும். கணவன்-மனைவி உறவு மிக நன்கு இருக்கும். புத்திரர்கள் நலம் ஓங்கும். அரசு அதிகாரிகள் இழந்த வேலை கிடைக்கப் பெறுவார்கள், பதவி உயர்வு பெறுவதற்கு உரிய காலமிது. சினிமா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலைஞர்கள், நடன, சங்கித கலைஞர்கள் தங்கள் துறையில் மீண்டும் புகழ் பெறுவார்கள். கார்த்திகை மார்கழி மாதங்களில் மட்டும் வாக்கு, பொருளாதார விஷயங்களில் கவனம் தேவை. இல்லையேல் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டு விடும். இந்த ராசியைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலருக்கும் திருமணம் சிறப்பாக நடக்கும். இந்த ராசி நேயர்களுடைய தாய் உடல் நலனில் கவனம் தேவை. எலெக்ட்ரானிக்ஸ், மருத்துவ துறையில் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடித்து புகழ் பெறுவார்கள். இந்த ராசிக்காரர்கள் பழைய சொத்து விற்றலும், புதிய சொத்து வாங்குதலும் ஏற்படும். இரும்பு வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். தங்க நகை வியாபாரிகளுக்கு நன்கு தொழில் நடைபெறும். வழக்குகளில் ஜெயமாகும்.

கன்னி ராசி (உத்திரம் 2,3,4 அஸ்தம், சித்திரை 1,2,ம் பாதம்)

இந்த ராசிக்கு குரு 6ம் இடத்தில் வந்தாலும் பின் 7ம் இடம் போவதாலும் சனி பகவான் 7ம் இடத்திலும், 8ம் இடத்திலும் வருவதாலும் இந்த ஆண்டு நன்மையான பலன்களும் அவை அல்லாத பலன்களும் கலந்து நடக்கும். இந்த ராசியை சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு அனுகூலமாக இல்லை. அரசு அதிகாரிகளுக்கு இடமாற்றங்களும், மேலதிகாரிகளால் சில பிரச்சினைகளும் ஏற்படலாம். கவனத்துடன் நடந்து கொள்ளவும் மாணவர்கள் தங்கள் படிப்பில் சற்று கூடுதலான முயற்சியோடு படிக்கவும். இந்த ராசி நேயர்களுக்கு வழக்குகளில் வெற்றி கிடைக்கும். இந்த ராசியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கப் பெறுவார்கள். இருந்தாலும் சுப விரயங்கள் அதிகமாக இருப்பதால் சேமிப்பு இருக்காது. இந்த ராசியைச் சேர்ந்த சினிமா கலைஞர்கள் துணிச்சலாக புதிய படைப்புகள் படைத்து வெற்றி காண்பார்கள். வெளிநாடுகளிலும் நாட்டிய இசை கலைஞர்கள் தங்கள் நிகழ்ச்சிகளினால் புகழ் பெறுவார்கள். மருத்துவ துறையில் உள்ளவர்கள் புதிய மருந்துகள் கண்டுபிடித்து புகழ் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலருக்கும் ஆண்டின் முற்பகுதியிலும், பிற்பகுதியிலும் திருமண காரியங்கள் சிறப்பாக நடைபெறும். கணவன்-மனைவி உறவில் சிறுசிறு பிரச்சினைகளின் ஊடே சந்தோஷமும், நிலவும். இந்த ராசியைச் சேர்ந்த இரும்பு வியாபாரிகள் நல்ல லாபம் அடைவார்கள். தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள் சிறப்பான ஆதாயம் அடைவார்கள். விற்காமல் இருந்த சொத்துக்கள் நல்ல விலைக்கு விற்று தங்களது பிரச்சினைகளைத் திர்ப்பார்கள். புதிய சொத்து சேர்க்கை தற்போது இல்லை. எந்திர தொழிலாளர்கள், வாகன ஓட்டுனர்கள் கார்த்திகை, மார்கழி, மாதங்களில் கவனமாக இருந்தால் விபத்தை தவிர்க்கலாம். இந்த கால கட்டத்தில் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும். பொறுமை மிகவும் அவசியம்.

துலாம் ராசி (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதம்)

இந்த ராசிக்காரர்கள் கடந்த காலத்தில் பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கக் குடிய காலம் இது. மகிழ்ச்சி, உல்லாசம், சுபகாரியங்கள் அனைத்தும் குடும்பத்தில் நடக்கக்கூடிய காலம். இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிறப்பான வெற்றியையும் புகழையும் பெறுவார்கள். எல்லா துறையைச் சேர்ந்த மாணவர்களும் கல்வியில் நன்கு தேர்ச்சி பெறுவார்கள். கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ், மருத்துவ துறை சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்களுடைய துறையில் புதிய கண்டு பிடிப்புகள் கண்டுபிடித்து இளம் விஞ்ஞானிகள் என்று புகழப்படுவார்கள். அரசு அதிகாரிகள் இடமாற்றத்துடன் கூடிய பதவி உயர்வுகள் பெற்று சந்தோஷமடைவார்கள். இந்த ராசியைச் சார்ந்த காவல்துறையினர், இராணுவத்தினர் அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவார்கள். இந்த ராசியைச் சார்ந்த விவசாயிகள் நல்ல மகசூலை பெறுவார்கள். கரும்பு, புகையிலை, பழவர்க்கங்கள் மிக நன்றாக விளைந்து இந்த ராசிக்காரர்களுக்கு நல்ல லாபம் தரும். திருமணமாகாத இந்த ராசியைச் சார்ந்த ஆண், பெண் இருபாலருக்கும் மிகச்சிறப்பான திருமண காரியங்கள் நடைபெறும். கணவன், மனைவி உறவு மிக இனிமையாக இருக்கும். குடும்பத்தில் உல்லாச பிரயாணங்கள், சுப நிகழ்ச்சிகள் அடிக்கடி இந்த வருடத்தில் நடைபெறும். தொழிலாளர்கள் தங்களுடைய உரிமையாளர்களால் பாராட்டப் பெறுவார்கள். இரும்பு வியாபாரிகள், உலோகங்கள் சம்பந்தமான வியாபாரிகள் நல்ல லாபம் அடையப் பெறுவார்கள். நகை வியாபாரிகள் தங்கள் தொழிலில் நல்ல ஆதாயம் அடைவார்கள். சினிமா இசைக்கலைஞர்கள் தங்களுடைய படைப்புகளில் புதிய

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

சாதனையைப் படைப்பார்கள் பரிசும், புகழும் அடைவார்கள். இந்த ராசிக்காரர்கள் வழக்குகளில் வெற்றி அடைவார்கள். கடன்கள் முற்றிலும் திரும். ஆண் குழந்தை புத்திர பாக்கியம் கிடைக்கும்.

விருச்சிக ராசி (விசாகம் 4, அனுஷம், கேட்டை)

இந்த ராசிக்காரர்களுக்கு இது முக்கியமான மாற்றம் ஏற்படக்கூடிய காலம். இந்த ராசிக்காரர்களுக்கு இடமாற்றம், தொழில் மாற்றம் இவை நடந்து அதிலிருந்து புதிய யோககாலம் ஆரம்பமாகும். அடுத்து வரக்கூடிய காலங்களில் சிறப்பான யோகம் அடைவார்கள். செய்யும் காரியங்களை துணிச்சலோடு செய்யுங்கள். வெற்றி நிச்சயம். இந்த ராசியைச் சார்ந்த அரசியல்வாதிகள் வெற்றி அடைவார்கள், புகழும் கிடைக்கும். அரசு அதிகாரிகளுக்கு இடமாற்றம் ஏற்படக்கூடிய காலம். ஆண்டின் பிற்பகுதியில் பதவி உயர்வு கிடைக்கும். இந்த ராசியைச் சார்ந்த விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும். நல்ல லாபம் கிடைக்கும். விவசாயிகள் புதிய சாகுபடிகள் துணிச்சலாக செய் யலாம். வெற்றி கிடைக்கும். இரும்பு வியாபாரிகள் நல்ல லாபமடைவார்கள். தங்கம், நகை வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். திருமணமாகாத ஆண், பெண் இருபாலருக்கும் ஆண்டின் முற்பகுதியிலும், பிற்பகுதியிலும் திருமண காரியங்கள் சிறப்பாக நடக்கும். மாணவர்கள் நன்கு படித்து சாதனை படைப்பார்கள். மருத்துவ துறையில் இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் நல்ல புகழும் பெயரும் பெற்று சாதனை படைப்பார்கள். இந்த ராசியைச் சார்ந்தவர் கள் கோவில் திருப்பணிகளில் அதிகமாக கலந்து கொள்வார்கள். வழக்குகளில் சமரசம் ஏற்பட்டு நிம்மதி அடைவார்கள். கணவன்-மனைவி உறவில் அந்நியோன்யம் இருக்கும். புத்திரபாக்கியம் ஏற்படும். புதிய சொத்துக்கள் மலிவாக கிடைத்து வாங்கும் யோகமும் உண்டு. புதிதாக நகைகள் வாங்கும் யோகமும் உண்டு. கார்த்திகை, மார்கழி மாதத்தில் குழந்தைகள் விஷயத்தில் கவனம் தேவை.

தனுசு ராசி (மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)

இந்த ராசியைச் சார்ந்தவர்களுக்கு குரு பெயர்ச்சியினால் இந்த ஆண்டு நல்ல பலன்களே நடைபெறும். சனிபகவான் மேஷ ராசியில் மாறி பின் வக்கிரமாகி மீனத்திற்கு திரும்ப வருவதால் கண்டச்சனியன் பாதிப்பு கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். பொதுவாக இந்த ராசியைச் சார்ந்த அரசியல்வாதிகள் அரசியலில் சற்று ஒதுங்கி இருப்பது நல்லது. பெரிய வெற்றியை இந்த கால கட்டத்தில் பெற முடியாது. அரசு அதிகாரிகள் சற்றே கவனத்துடன் மேலதிகாரிகளிடம் நடந்து கொள்வது நலம். கண்டச்சனியினால் விரும்பத்தகாத இடமாற்றங்கள் ஏற்படலாம். மாணவர்கள் படிப்பில் மிகுந்த அக்கறையுடன் படிக்க வேண்டும். இந்த ராசியைச் சார்ந்த கம்ப்யூட்டர் எலெக்ட்ரானிக்ஸ், தொழில் கல்வி மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக இருக்கும். திருமண காரியங்கள் கை கூடுவது சற்று சிரமம் தான். கணவன், மனைவி உறவுகள் சிறப்பாக இருக்கும். விவசாயிகளுக்கு விவசாயம் சுமாராக இருக்கும். மருத்துவ துறையை சார்ந்தவர்கள் புதிய மருந்துகள் கண்டுபிடிப்பார்கள். பூர்வீக சொத்துக்கள் விற்பனையாகக் கூடிய காலம். அதை விற்று புதிய சொத்துக்கள் வாங்கலாம். இரும்பு வியாபாரிகளுக்கு தொழில் நன்கு நடக்கும். தங்கம், வெள்ளி நகை வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தமாகத்தான் இருக்கும். தொழில் அதிபர்கள் தொழிலாளிகளிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. புத்திர பாக்கியம் கிடைக்கும் வாய்ப்புண்டு. எந்திரங்களை இயக்குபவர்கள், வாகன ஓட்டுனர்கள் கார்த்திகை, மார்கழி மாதங்களில் கவனமுடன் இயக்கவும். சிலருடைய பெற்றோர் உடல் நலம் கடுமையாக பாதிக்கலாம். கோயில் திருப்பணிகளில் கலந்து கொள்வது நலம் தரும்.

மகர ராசி (உத்திராடம் 2,3,4 திருஓணம், அவிட்டம், 1,2,ம் பாதம்)

இந்த ராசி நேயர்களுக்கு இந்த வெகுதான்ய வருடம் ஒரு சிறப்பான காலம். இந்த வருடத்தில் அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வுகளோடு இடமாற்றம் ஏற்படும். இந்த ராசி நேயர்களுக்கு இந்த வருடம் சேமிப்பு நன்கு இருக்கும். இந்த வருடம் மாணவர்கள் நன்கு படிப்பார்கள். கம்ப்யூட்டர், எலெக்ட்ரானிக்ஸ், தொழில் கல்வி, என்ஜினியரிங் மாணவர்கள் நன்கு படிப்பார்கள். ஆண்டின் இறுதியில் கவனமாக படிக்க வேண்டும். விவசாயிகள் அமோக விளைச்சலைப் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த விவசாயிகள் கரும்பு, புகையிலை பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். சினிமா, இசைக்கலைஞர்கள், நாட்டிய கலைஞர்கள் தங்கள் தொழிலில் அமோக லாபமும், புகழும் பெறுவார்கள். மருத்துவ துறையில் மாணவர்கள் நன்கு படிப்பார்கள். புதிய மருந்துகள் க[illegible]ர்கள். இந்த ராசியைச் சேர்ந்த ஆண்,

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

பெண் இருபாலருக்கும் திருமண காரியங்கள் சிறப்பாக நடக்கும். கணவன்-மனைவி உறவு மிக இனிமையாக இருக்கும். குடும்பத்திற்கு தேவையான ஆடம்பர பொருட்கள் இந்த ஆண்டு வாங்குவார்கள். புதிய ஆபரண சேர்க்கைகள் சிறப்பாக உண்டு. புதிய சொத்து வாங்கும் யோகமும் உண்டு. இரும்பு வியாபாரிகளுக்கு இந்த வருடம் வியாபாரம் நன்கு இருக்கும். தங்கம் வெள்ளி, நகை வியாபாரிகள் தங்கள் தொழிலில் நல்ல லாபம் அடைவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த வாகன ஓட்டுனர்கள், எந்திரத் தொழிலாளர்கள் கார்த்திகை-மார்கழி மாதங்களில் கவனமுடன் இருக்கு் வேண்டும். ஜவுளித் தொழிலில் உள்ளவர்கள் இந்த ஆண்டு தொழிலில் நல்ல லாபம் சம்பாதிப்பார்கள். சிலருக்கு ஆண் குழந்தை புத்திர பாக்கியம் கிடைக்கும் உண்டு.

கும்பராசி (அவிட்டம், 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதம்)

இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த ஆண்டு பட்ட கஷ்டங்கள், நோய்களின் கொடுமை இவை நீங் கும். இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்கு ஜென்ம குரு பாதிக்காது. மாறாக யோகம் செய்யும். இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள், வெற்றிகள் அடைவார்கள். புகழும் கிடைக்கும். அரசு அதிகாரிகள் பதவி உயர்வுகளோடு இடமாற்றம் அடைவார்கள். அரசு அதிகாரிகளில் கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பதவி கிடைத்து விடும். இந்த ராசியைச் சேர்ந்த மாணவர்கள், குறிப்பாக எலெக்ட்ரானிக்ஸ், இரசாயன- சம்பந்தப்பட்ட கல்விகளில் நல்ல தேர்ச்சி பெறுவார்கள். விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும். குறிப்பாக இவர்கள், பருத்தி, கரும்பு, நவதானியங்கள் மகசூல் செய்தால் அதிக லாபம் அடைவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலருக்கும் திருமண காரியங்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். கணவன், மனைவி உறவில் இதுவரையில் இருந்த கசப்புணர்வுகள் மாறி அந்நியோன்யமாக இருப்பார்கள். இரும்பு வியாபாரிகள் நல்ல லாபம் அடைவார்கள். தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள் எதிர்பாராத விதத்தில் அமோக லாபம் அடைவார்கள். ஜவுளி வியாபாரிகளுக்கு இந்த ஆண்டு நல்ல லாபம் அடையப் பெறுவார்கள். சிலருக்கு ஆண் குழந்தை புத்திர பாக்கியம் கிடைக்கும். கார்த்திகை-மார்கழி மாதங்களில் குடும்பத்தில் அமைதி காப்பது நலம். பொருளாதார பிரச்சினைகளை கவனமுடன் கையாளவும். இந்த ராசியைச் சார்ந்த மருத்துவ துறையில உள்ளவர்களால் புதிய உயிர்காக்கும் மருந்துகள் கண்டு பிடிக்கப்படும். சினிமா, இசை, நாட்டிய கலைஞர்கள் தங்கள் தொழிலில் புகழையும் நல்ல வருமானத்தையும் அடையப் பெறுவார்கள். பேப்பர் தொழிலில் உள்ளவர்கள் நல்ல லாபம் அடைவார்கள். இந்த ராசி நேயர்கள் வீட்டிற்கு தேவையான ஆடம்பர பொருட்கள் வாங்குதலும், கல், தங்க ஆபரண நகைகளும் வாங்கும் யோகம் உண்டு.

மீனராசி (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

இந்த வெகுதான்ய ஆண்டு இந்த ராசி நேயர்களுக்கு ஒரு நல்ல ஆண்டாக இருக்கும். பல நன்மைகளும், சில தீமைகளும் கலந்து பலன்கள் நடக்கும். இந்த ராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் கடுமையான முயற்சியின் பேரில் வெற்றியடைவார்கள். புதிய சாதனைகள் படைத்து புகழ் பெறுவார்கள். இந்த ராசியைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் தாங்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள். பதவி உயர்வு மட்டும் தாமதப்படும். இந்த ராசியைச் சேர்ந்த மாணவர்கள் மிகுந்த கவனத்துடன் படிக்க வேண்டும். தொழில்கல்வி, என்ஜினியரிங், கம்ப்யூட்டர் படிப்புகளில் உள்ளவர்கள் தடையின்றி படிப்பார்கள். இந்த ராசியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்து லாபமடைந்தாலும் அது கடனைத் தீர்ப்பதற்கே சரியாகிவிடும். புதிய கடன் பட நேரிடும். கணவன், மனைவி உறவு சுமூகமாகவே இருக்கும். கார்த்திகை-மார்கழி மாதங்களில் கணவன்-மனைவிக்குள் கடுமையான பிரச்சினைகள் உருவாகலாம். கவனம் தேவை. இரும்பு வியாபாரிகள் நல்ல லாபம் அடைவார்கள். தங்கம், வெள்ளி, நகை வியாபாரிகளுக்கு அளவோடு லாபம் கிடைக்கும். மருத்துவ துறையில் உள்ளோர் புதிய மருந்துகளின் கண்டுபிடிப்பினால் புகழடைவார்கள். திருமணமாகாத ஆண்-பெண் இருபாலருக்கும் ஆண்டின் பிற்பகுதியில் திருமண காரியங்கள் நடக்கும். இரும்பு எந்திர தொழிலில் உள்ளோர், வாகன ஓட்டுனர்கள் கார்த்திகை-மார்கழி மாதங்களில் மிகமிக கவனத்துடன் இருந்தால் விபத்தை தவிர்க்கலாம். சினிமா, நாட்டிய, இசை கலைஞர்களுக்கு இந்த ஆண்டு தொழில் மந்தமாக இருக்கும். குடும்பத்தில் கடன் வாங்கி சில பொருள் சேர்க்கை ஏற்படும். கோவில் திருப்பணிகளில் கலந்து கொள்வது நலம் தரும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

கைலாய பர்வத வாகன பவனி. சுசீந்திரம் ஸ்ரீ தாணுமாலய மூர்த்தி கோவிலில் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அஷ்டாபிஷேகம். திருமாலிருஞ்சோலை திருப்பள்ளி எழுச்சி ஆரம்பம். குற்றாலம் சபாபதி தாண்டவ தீபாராதனை. நாச்சியார் கோவில் உத்சவ தீர்த்தம். தெப்ப உத்சவம். 16உ: பெருஞ்சேரி ஸ்ரீவாகீசுவரர் புறப்பாடு. காஞ்சி வரதர் திருவாய்மொழி உற்சவ சேவை. திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் மஹாரதோத்சவம். ஸ்ரீரங்கம் நம்பெருமாள் இராபத்து உத்ஸவம். திருத்தணி திருப்படி விழா. 17உ: இரவு நடராஜர் மஹாபிஷேகம் மதுரை மீனாட்சி நீராட்டம் பொன்னூஞ்சல். 18உ: அருணோதயத்தில் ஆருத்திரா தரிசனம். நெல்லை தாம்ரசபா நடனம். ஆவுடையார் கோவில் உபதேசக்காட்சி. 19உ: திருவண்ணாமலை ஸ்ரீரமண மஹரிஷி ஜெயந்தி. 22உ: திருவையாறு தியாகராஜர் ஆராதனை. 24உ: ஸ்ரீவிலி ஆண்டாள் தைலக்காப்பு உத்ஸவாரம்பம். 26உ: மதுரை, திருவேடகம், தென்கரை, திருமங்கலம், தேவகோட்டை முதலான தல அஷ்டமி பிரதக்ஷிணம்.

தை மீ 1உ: திருவையாறு, திருவண்ணாமலை அயன உத்ஸவ தீர்த்தம். மதுரை கல்யானைக்கு கரும்பளித்து அருளிய லீலை. 2உ: தைலக்காப்பு சம்புரோக்ஷண உத்சவாரம்பம். 3உ: நெல்லை லக்ஷதீபம். ரிஷப சேவை சிதம்பர தர்ஸ தீர்த்தம். வேதாரண்யம். ராமேஸ்வரம் தீர்த்தோத்ஸவம். 5உ: மதுரை வடக்குவாசல் செல்லத்தம்மன் தீர்த்தவாரி. திருநாங்கூர் 11 கருடசேவை. 6உ: மதுரை ஸ்ரீமீனாக்ஷியம்மன் புஷ்ப உத்சவ துவஜம். 8உ: ஸ்ரீரங்கம் பூபதி உற்சவாரம்பம். குன்னக்குடி, காளையார்கோவில், நெல்லை, திருவிடைமருதூர், திருவேடகம், சென்னை கந்தசாமி முதலிய தல புஷ்ய உத்ஸவதுவஜம். 10உ: திருவாடுதுறை கோவில் தீர்த்த உத்சவம் ரதசப்தமி. 11உ: ஸ்ரீரங்கம் கருடசேவை. நெல்லையில் நெல்லுக்கு வேலிகட்டிய லீலை. விருஷப சேவை. 13உ: மதுரை மத்ஸியகந்தி திருமணம் திருப்பரங்குன்றம் தெப்ப உத்சவம். குன்னக்குடி தங்க விமானம். 15உ: மதுரை மீனாட்சியம்மன் தீர்த்த உத்ஸவம் ரிஷப சேவை, குன்னக்குடி வெள்ளி ரதம். 16உ: மதுரை கதிரறுப்பு விழா. ஸ்ரீரங்கம் திருத்தேர் மற்ற தலங்களில் ரதம். பழனி திருக்கல்யாணம் வெள்ளி ரதம். 17உ: தைப்பூசம் வண்டியூர் தெப்ப உத்சவம். குன்னக்குடி தெப்பம். திருச்சுழி இராமநாதபுரம் பாலசுப்ரமண்யர் ரதம். 18உ: திருச்சுளி, இராமநாதபுரம் பாலசுப்ர்மண்யர் தீர்த்தோத்சவம். 19உ: திருநெல்வேலி தெப்ப உத்சவம். 23உ: ராமேஸ்வரம், திருக்கோகர்ணம், இராமநாதபுரம் முத்தாலம்மன் உத்சவ துவஜம். 28உ: ராமேஸ்வரம், திருக்கோகர்ணம், இராமநாதபுரம் முத்தாலம்மன் ரிஷபம்.

மாசி மீ 2உ: ராமேஸ்வரம், திருக்கோகர்ணம், இராமநாதபுரம், முத்தாலம்மன் ரதம், ஸ்ரீசைலம் காளஹஸ்தி ராமேஸ்வரம் தல சிவராத்திரி உத்ஸவம். சிதம்பர ஏகதின லக்ஷார்ச்சனை. மஹாசிவராத்திரி. 3உ: ராமேஸ்வரம், திருக்கோகர்ணம், இராமநாதபுரம், முத்தாலம்மன் தீர்த்த உத்சவம். 6உ: ஸ்ரீரங்கம் பெருமாள் தெப்ப உத்சவாரம்பம். 7உ: திருச்செந்தூர், பெருவயல் துவஜாரோஹணம். 9உ: ஸ்ரீரங்கம் கருடசேவை. வேதாரண்யம், கும்பகோணம், நல்லூர், விருத்தாச்சலம், சதுர்வேத மங்கலம், மதுரை நன்மைதருவார் கோவில் உத்சவ துவஜம். 12உ: திருச்செந்தூர், பெருவயல் இரவு வெள்ளி ரதம். 13உ: திருச்செந்தூர், பெருவயல் தல தங்க சப்பரம். ஷண்முக பிரம்ம அம்சம். ஸ்ரீரங்கம் நம்பெருமாள் திருப்பள்ளி ஓடம். 14உ: ஸ்ரீரங்கம் பந்தல் காட்சி. சாற்றுமுறை. திருச்செந்தூர், பெருவயல் அதிகாலை வெள்ளை சாத்தி ருத்ராம்சம். பகலில் பச்சை சாத்தி விஷ்ணு அம்ச தரிசனம். 15உ: வேதாரண்யம், கும்பகோணம், நல்லூர், விருத்தாச்சலம், சதுர்வேத மங்கலம், மதுரை நன்மை தருவார் கோவில் திருக்கல்யாணம். திருமாலிருஞ்சோலை தெப்ப உத்சவம். 16உ: கும்பகோணம், வேதாரண்யம், நல்லூர், விருத்தாச்சலம், சதுர்வேத மங்கலம், மதுரை நன்மை தருவார் கோவில், திருச்செந்தூர், பெருவயல் ரதம், திருமாலிருஞ்சோலை கஜேந்திர மோட்க்ஷம். 17உ: திருச்செந்தூர், பெருவயல் தீர்த்தோத்ஸவம். வேதாரண்யம், கும்பகோணம், நல்லூர், விருத்தாச்சலம், சதுர்வேத மங்கலம், மதுரை நன்மை தருவார் கோவில் தீர்த்தோத்ஸவம். மதுரை கூடலழகர், திருக்கோஷ்டியூர் தெப்ப உற்சவம். திருமோகூர் காளமேகப்பெருமாள் கருடசேவை. அந்தியா வகையறா (யானைமலை) மண்டபத்தில் கஜேந்திர மோட்க்ஷம். திருவேடகம் தீர்த்த உத்சவம். மதுரை பக்தர்கள் கழுகு மலையில் மஹாபிஷேகம். மதுராந்தகம் பெருமாள் தெப்பம். கும்பகோண சிவ, விஷ்ணு மூர்த்திகள் மகாமக புஷ்கரணியில் தீர்த்தோத்ஸவம். கும்பகோணம் சாரங்கபாணி பெருமாள் தெப்ப உத்சவம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பங்குனி மீ: 8உ: குன்னக்குடி, திருப்புவனம், சிவகிரி, நெல்லை, திருச்சுளிகை, திருவாரூர், லால்குடி தல உத்ஸவ துவஜம். 9உ: மன்னார்குடி தீர்த்தவாரி, திருத்தேர் மதுரை மதனகோபாலர் கஜேந்திர மோட்க்ஷம். 11உ: தேவகோட்டை ராமர் சன்னதி உத்சவாரம்பம். கல்லங்குறிச்சி கலியபெருமாள் உற்சவாரம்பம். 12உ: மைலாப்பூர், திருவான்மியூர், லால்குடி விருஷபம். மேலக்கோட்டை, திருநாராயண ஸ்வாமி வைர முடி சேவை. குன்னக்குடி வள்ளி திருக்கல்யாணம். 14உ: குன்னக்குடி தங்க விமானம். மேலக்கோட்டை திருநாராயணசாமி கருடசேவை. திருமாலிருஞ்சோலை திருக்கல்யாண உத்சவாரம்பம். 15உ: திருச்சுளி திருக்கல்யாணம், தாயமங்கலம் முத்துமாரியம்மன் உத்சவாரம்பம். 16உ: மைலாப்பூர், திருவான்மியூர், லால்குடி ரதம். பழனி வள்ளி கல்யாணம். 17உ: திருவாரூர் ருத்ரபாதம். திருநெல்வேலி செங்கோல் கொடுத்தல். திருவேடகம் தீர்த்தோத்ஸவம். மதுரை மீனாட்சி வசந்த உத்ஸவ பூர்த்தி. மதுரை கூடலழகர், நவநீதகிருஷ்ணன் கோவில், திருமோகூர், ஸ்ரீவிலிபுத்தூர் முதலான தலங்களில் திருக்கல்யாண உத்சவம். திருப்புல்லாணி திருத்தேர். வானுமாமலைப் பெருமாள் தீர்த்த உத்ஸவம். மைலாப்பூர், லால்குடி, திருவான்மியூர், தீர்த்தம். திருமாலிருஞ்சோலை திருக்கல்யாணம். 18உ: பரமக்குடி முத்தாலம்மன் ரதம். மேலக்கோட்டை வெண்ணை தாழி திருப்பரங்குன்றம் பட்டாபிஷேகம். திருமாலிருஞ்சோலை ஸ்ரீகள்ளழகர் மஞ்சள் நீராட்டு. 19உ: பரமக்குடி முத்தாலம்மன் பாலாபிஷேகம், புஷ்பப்பல்லக்கு. மேலக்கோட்டை ரதம். தீர்த்தோத்ஸவம். திருப்பரங்குன்றம் திருக்கல்யாணம். மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் வருகை. 20உ: திருப்பரங்குன்றம் ரதம். 21உ: திருப்பரங்குன்றம் தீர்த்தோத்ஸவம். விருதுநகர் மாரியம்மன் உத்ஸவ துவஜம். 22உ: தாயமங்கலம் மாரியம்மன் பொங்கல். 23உ: தாயமங்கலம் ரதம். 24உ:தாயமங்கலம் பால்குடம். இரவு புஷ்பப் பல்லக்கு. 28உ: விருதுநகர் மாரியம்மன் பொங்கல். உப்பிலியப்பன் பெருமாள் திருத்தேர். தீர்த்தவாரி. 29உ: விருதுநகர் மாரியம்மன் அக்னிசட்டி. 30உ விருதுநகர் மாரியம்மன் ரதம்.

நல்ல நாட்கள் அறிதல்

புதன் சனிக்கிழமை பொன், வெள்ளி, செவ்வாய், வெள்ளிக்கிழமை நெல் மற்றும் இதர தானியங்கள் கொடுக்கக்கூடாது. கார்த்திகை, மகம், உத்திரம், சித்திரை, மூலம், ரேவதி நட்சத்திரங்களில் யாதொன்றையும் யாருக்கும் கொடுக்கவும் வாங்கவும் கூடாது. அப்படி செய்தால் மீதி இருக்கும் பொருட்களுக்கும் கூட சேதம் உண்டாகும்.

மத்வாச்சாரியார் புண்ய தீர்த்த தினங்கள்

சித்திரை மீ 2உ வாசீகர் 9உ ஸத்ய விஜயர், 11உ ஸத்ய பிரியர், 16உ வித்யாதிராஜர், 19உ ராமச்சந்திரர். வைகாசி மீ 14உ ஸத்ய சந்தர் 26உ ஸத்யாபிநவர், 29உ ஸத்யஸம்பூர்ணர், 30உ ரகுவர்யர், ஆனி மீ 4உ ஸத்யதீரர், 9உ ஸத்யாபிவேதி, 25உ ஸத்யசங்கல்பர், 30உ ஸ்ரீஜயதி. ஆடி மீ 6உ ஸ்ரீவிஜயந்திரர் 14உ ஸ்ரீஸத்யவரதர், 24உ ஸ்ரீராகவேந்திரர். ஆவணி மீ 3உ ஸ்ரீஸத்ய தர்மர் 17மீ ஸ்ரீஸத்யேஷ்டகாமர். புரட்டாசி மீ 4உ ஸ்ரீமாதவர், 11உ ஸ்ரீஸத்யபராயணர், 12உ ஸத்ய விக்ரமர், 14உ ஸ்ரீமத்வ ஜெயந்தி. ஐப்பசி மீ 10உ வேதேசர், 13உ ஸத்ய வீரர் 14உ வேதநிதி 21உ ஸ்ரீபத்மநாபர், வித்யாநிதி. கார்த்திகை மீ 1உ ஸ்ரீபத்மநாபர், 12உ ஸத்யநிதி, 13உ ஸத்யநாதர், 18உ ரகுநாதர், 22உ அக்ஷோப்யர். மார்கழி மீ 14உ ரகோத்தமர், 23உ ஸத்யகாமர், 24உ நரஹரி, 25உ ஸத்யபிரக்ஞர், தை மீ 2உ வித்யாதீசர், 3உ புரந்தரதாசர், 11உ ஸ்ரீமதானந்தர், 13உ ஸ்ரீ ஸத்யஞானர். மாசி மீ 6உ வாதிராஜர், 11உ ஸத்யவரதர், 18உ ஸ்ரீ சத்யபோந்தர் 22உ வியாசராஜர். பங்குனி மீ 4உ ஸத்ய சந்துஷ்டர், 5உ ஸத்ய பிரக்ஞர் 7உ வேதவியாசர், 11உ ரவீந்திரர், 15உ ஸத்யவிருத்தர், 20உ வாகீசர், 29உ ஸ்ரீஸத்யவிஜயர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

அறுபத்து மூன்று நாயன்மார்கள் மாணிக்க வாசகர் சந்தான குரவர்கள் முத்தி பெற்ற நாட்கள்

சித்திரை மீ 9உ திருநாவுக்கரசர் 14உ சிறுத்தொண்ட நாயனார் 16உ மங்கையர்க்கரசியார், 18உ விரன் மீண்ட நாயன..ர் 25உ உமாபதி சிவாச்சாரியர் 26உ இசை ஞானியர் 27உ திருக்குறிப்புத் தொண்டர் வைகாசி மீ 10உ கழற்சிங்க நாயனார் 16உ நமிநந்தியடிகள், சேக்கிழார் நாயனார் 17உ சோமாசிமாற நாயனார் 28உ திருஞான சம்மந்தர், முருக நாயனார், திருநீலகண்ட நாயனார் திருநீலகண்ட யாழ்பாண நாயனார். ஆனி மீ 4உ கலிக்காம நாயனார். 14உ மாணிக்க வாசகர் 15உ அமர்நீதி நாயனார் 24உ அருணகிரி நாதர் ஆடி மீ 3உ மூர்த்தி நாயனார், புகழ்சோழ நாயனார் 6உ கூற்றுவ நாயனார் 14உ பெருமிழலைக் குறும்ப நாயனார், 15உ சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரன் மாபெருமான் நாயனார் கழறிற்றரிவர் நாயனார் 18உ கலிய நாயனார் கோட்புலி நாயனார் 21உ பட்டிணத்தார் ஆவணி மீ 4உ சிறுத்துணை நாயனார் 5உ புகழ்துணை நாயனார் அதிபத்த நாயனார் 6உ இளையான்குடி மாற நாயனார் 8உ மறை ஞான சம்மந்த சிவாச்சாரியார் 14உ குலச்சிறை நாயனார் 16உ குங்கிலியக் கலைய நாயனார் புரட்டாசி மீ 3உ அருணந்தி சிவாச்சாரியார் 14உ ஏனாதி நாயனார் 17உ நரசிங்க முனையறைய நாயனார் 21உ உருத்திர பசுபதி நாயனார் 24உ திருநாளைப் போவார் நாயனார் ஐப்பசி மீ 4உ மெய்கண்ட தேவர் 6உ பூசலார் நாயனார் 8உ ஐயடிகட் காடவர்கோன் நாயனார் 17உ திருமூல நாயனார் 18உ நெடுமாற நாயனார் 19உ இடங்கழி நாயனார் 24உ சக்தி நாயனார் கார்த்திகை மீ 6உ மூர்க்க நாயனார் 7உ சிறப்புலி நாயனார் 16உ கணம்புல்ல நாயனார் 25உ மெய்ப்பொருள் நாயனார் 26உ ஆனாய நாயனார் மார்கழி மீ 5உ சாக்கிய நாயனார் 12உ வாயிலார் நாயனார் 18உ சடைய நாயனார் 24உ இயற்பகை நாயனார் 27உ மானக்கஞ்சார் நாயனார் தை மீ 6உ அப்பூதியடிக நாயனார் 9உ கலிக்கம்ப நாயனார் 10உ திருவாடுதுறை நமச்சிவாய தேசிகர் 14உ கண்ணப்ப நாயனார் 15உ அறிவாட்ட நாயனார் 21உ சண்டேஸ்வர நாயனார் 25உ திருநீலகண்ட நாயனார் தாயுமான சுவாமிகள் மாசி மீ 5உ கோச்செங்கட் சோழ நாயனார் 19உ திருவள்ளுவ நாயனார் 20உ எரிபத்த நாயனார் 28உ காரி நாயனார் பங்குனி மீ 9உ சிவநேச நாயனார் 11உ கணநாத நாயனார் 12உ முனையடுவார் நாயனார் 20உ காரைக்கால் அம்மையார்

ஆழ்வார் ஆச்சாரியர் அஹோபில மடம் அழகிய சிங்கர்களின் திருநஷத்திரங்கள்

சித்திரை மீ 10உ 32வது பட்டம் 12உ பெரிய பெருமாள் 13உ வடுக நம்பிகள் 15உ ? உய்யக்கொண்டார் 16உ எங்களாழ்வார் 18உ எம்பெருமானார், கோயில் ஸோமயாஜி ஆண்டார் 19உ 24வது பட்டம் முதலியாண்டார் 25உ கிடாம்பியாச்சான் 26உ மதுரகவியாழ்வார், திருத்தாழ்வரை தாஸர், நாடாதூரம்மாள், திருமலை அனந்தாழ்வான் 29வது பட்டம் 27உ பெரிய திருமலை நம்பிகள் வைகாசி மீ 5உ 27வது பட்டம் 10உ 39வது பட்டம் 12உ திருக்கோஷ்டியூர் நம்பிகள் 16உ நாலுகவி பெருமாள் நல்லான் 21உ தேவ பெருமாள் அழகிய சிங்கர் 25உ நம்மாழ்வார் 7வது 10வது பட்டம் திருவாய்மொழிப் பிள்ளை 26உ பட்டர் 27உ திருவரங்கப் பெருமாள் அரையர் 35வது பட்டம் ஆனி மீ 4உ 23வது பட்டம் 10உ 9வது பட்டம் 19உ திருவாழியாழ்வார் 20உ பெரியாழ்வார் வடக்குத் திருவீதிப்பிள்ளை அழகிய சிங்கர் 22உ ஸ்ரீமந்நாத முனிகள் 24உ திருப்புளியாழ்வார் 26உ 13வது பட்டம் 31உ 23வது பட்டம் ஆடி மீ 8உ 36வது பட்டம் பிரதிவாத பயங்கர மன்னன் 26வது பட்டம் சூடிக்கொடுத்த நாச்சியார் (ஆண்டாள்) தந்தாடை தோழப்பர் 13உ பத்ரீ நாராயணர் 15உ பரத்துவாஜ ஸ்ரீனிவாச ஜீயர் 25வது பட்டம் பெரிய திருவடி (பக்ஷிராஜர்) 22உ 14வது பட்டம் ஸ்ரீ ஆளவந்தார் புண்டரீகாக்ஷர் 23உ தேக்காழ்வார் 31உ 22வது பட்டம் ஆவணி மீ 9உ 44வது பட்டம் 15உ 2வது பட்டம் 16உ 28வது பட்டம் 19உ விகனஸாச்சாரியார் 27உ ஸ்ரீ கண்ணன் பெரிய வாச்சான் பிள்ளை நைநாராச்சான் பிள்ளை புரட்டாசி மீ 6உ கோயில் கந்தாடை வார்தூல பாவநாச்சார் 9உ திருமலை நம்பிகள் 33வது பட்டம் 15உ ஸ்ரீநிகமாந்த தேசிகர் திருவேங்கிடமுடையார் 11உ 1வது பட்டம் 12உ 20வது பட்டம் 17உ 17வது பட்டம் 18உ கோயில் கந்தாடை வார்தூல அண்ணன் 27உ ஸ்ரீவானமாமலை ஜீயர் 29உ 18வது பட்டம் 31உ 12வது பட்டம் ஐப்பசி மீ 8உ ஸ்ரீமணவாள மாமுனிகள் உத்தம நம்பிகள் பெரிய ஜீயர் 11வது பட்டம் 10உ திருக்குறுகை பிரான்பிள்ளை ஸேனை முதலியார் 12உ பொய்கை ஆழ்வார் பிள்ளை லோகாச்சாரியார் 13உ பூதத்தாழ்வார் 14உ பேயாழ்வார் முதலாழ்வார் 22உ குருகுலோத்துமதாசர் 25உ எதிராஜஜீயர் கார்த்திகை மீ 4உ கோடி கன்னிகாதான தாதாச்சாரியார் 5உ கோயிலானார் 7உ 43வ்து பட்டம் 8உ கோவில் ஸோமயாஜி ஆண்டார் தீர்த்தம் 34வது பட்டம் 13உ கோவில் கந்தாடை வார்தூல தேசிகன் 16உ திருமங்கை ஆழ்வார் நம்பிள்ளை 5வது பட்டம் 17உ திருப்பாணாழ்வார் 23உ 31வது பட்டம் மார்கழி மீ 7உ கோயில் பெரிய திருவடிகள் 11உ 41வது பட்டம் 13உ 8வது பட்டம் 17உ 16வது பட்டம் 26உ 4வது பட்டம் 28உ 30வது 40வது பட்டம் 30உ தொண்டரடிப் பொடியாழ்வார் பெரிய நம்பிகள் ஸ்ரீரெங்கம் நாராயண ஜீயர் நல்லூராச்சான் பிள்ளை தைமீ 4உ 42வது பட்டம் 5உ 32வது பட்டம் 7உ 6வது பட்டம் 15உ 38வது பட்டம் 16உ எம்பார் 19உ திருமழிசை ஆழ்வார் 22உ கூரத்தாழ்வார் 23உ 15வது பட்டம் மாசி மீ 3உ ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவத்யயனம் 5உ சிறிய திருவடிகள் 12உ திருக்கச்சி நம்பிகள் 14உ குலசேகராழ்வார் 15உ 37வது பட்டம் 17உ மணக்கால் நம்பிகள் திருமலையாண்டான் 19வது பட்டம் பங்குனி மீ 5உ பெரிய பெருமாள் 13உ செல்வப்பிள்ளை 17உ பெரிய பிராட்டியார் நம்ஜீயர் 18உ திருவரங்கத்தமுதனார் 21வது பட்டம்

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

பஞ்சாங்க சரித்திரத்தில் ஓர் புதுமை . . .

" ஆற்காடு ஸ்ரீசீதாராமஹனுமான் பஞ்சாங்கம் "

(பாக்கெட் பஞ்சாங்கம்)

- பாக்கெட் அளவிலான கையடக்க பிரதி
- எளிய தமிழில் எழுதப்பட்ட அரிய விஷயங்கள் அடங்கியது.
- நாழிகை வினாடி முறையை மாற்றி அனைத்தும் மணி நிமிடமாக தரப்பட்டுள்ளது.
- அன்றாட வாழ்வில் தேவைப்படும் அனைத்து பஞ்சாங்க பலாபலன்களும் ஒருங்கே அமையபெற்றது.

வாங்கிப் பயனடைவீர் . . .

வாழ்வில் வளம் பெறுவீர் . . .

60 வருட பஞ்சாங்கம்

விரைவில் . . .

வெகுதான்ய வருஷத்திய (1937-38) முதல் வெகுதான்ய வருடம் 1998 வரையிலுமான 60 வருடங்களுக்குரிய பல அரிய நவீன விஷயங்கள் அடங்கிய புதிய

"ஆற்காடு ஸ்ரீசீதாராமஹனுமான் சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்"

வருகிறது . .

முன்பதிவு செய்யுங்கள் .

எங்களிடம்

பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்கள், துணைநூல்கள், பஞ்சாங்கம், ஜோதிட & ஜாதக நூல்கள், வேலைவாய்ப்பு தேர்விலே வெற்றி பெற வழிகாட்டும் நூல்கள், நோட்டுப் புத்தகங்கள், குறிப்பேடுகள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

M. பழனியாண்டி சேர்வை புக் டிரேடர்ஸ்

(புதுமண்டபம் அருகில்)

B-28, எழுகடல் தொடர் அங்காடி வளாகம்,

மதுரை - 625 001.

தொலை பேசி : 33606, 33066

குறிப்பு: இப்பஞ்சாங்கத்தில் வெளிவரும் விளம்பரங்களுக்கு பதிப்பகத்தார் பொறுப்பல்ல

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆற்காடு ஜோதிடர்

கா.வெ. தோராமய்யர்

(Late) K.S.V. சுப்ராமய்யர்
(ஜோதிட வல்லுனர்)
ஆற்காடு

ஜோதிடர் K.S. குப்புசாமி அய்யர்
நெ.52, தோராமய்யர் தெரு
ஆற்காடு (வ. ஆ. மாவட்டம்)

துவக்கம் : 1900

நடப்பு 1998

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.